# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 8 ● இதழ் 31 ● 8 செப்டம்பர் 1970 ● பக்கங்கள் 8 ● விலை சதம் 10

**மாசேதுங் சிந்தனை**

உறுதியுடனிருங்கள், தியாகம் எதற்கும் அஞ்சாதீர்கள், வெற்றியை வென்றெடுக்க சகல கஷ்டங்களையும் கடவுங்கள்.

### ஏகாதிபத்திய வெள்ளைத் தோட்ட முதலாளிகளின் நலனுக்காக

# இரு தொழிலாளர்களை பொலிஸ் சுட்டுக் கொன்றது

**செப்டம்பர் மாதம் முதலாம் திகதி பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த கீனுகலை தோட்டத்தில் இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கத்தின் தலைமையில் வேலைநிறுத்தம் செய்துவரும் தொழிலாளர்கள் மீது பொலிஸார் மிருகத்தனமாகத் துப்பாக்கியால் சுட்டு பி. ராமையா, அழகர்சாமி என்ற இரு தொழிலாளர்களையும் படுகொலை செய்துள்ளனர். பல தொழிலாளர்களை படுகாயப்படுத்தியுள்ளனர். ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கைது செய்துள்ளனர்.**

தமது துப்பாக்கிகளால் சுட்டுக் கொன்ற இரு தொழிலாளர்களினதும் சடலங்களையும் ஆசாரப்படி தோட்டத்தில் அடக்கம் செய்ய அவர்களின் குடும்பத்தினரிடம் சட்டப்படி ஒப்படைக்க மறுத்த பொலிஸார், பலாத்காரமாக, சட்ட விரோதமாக இரு தியாகிகளின் உடல்களையும் அனாதைப் பிணங்களாக பதுளை மயானத்தில் அடக்கம் செய்துள்ளனர்.

பொலிஸின் இந்த நீசத்தனமான அத்துமீறிய காட்டுமிராண்டிச் செய்கையையும், அடக்குமுறையையும் நாம் மிகக் கடுமையாகக் கண்டிக்கின்றோம்.

''மக்கள் அரசாங்கம்'' ''சோஷலிஸ அரசாங்கம்'' எனக் கூரைமேல் நின்று கூப்பாடுபோடும் முக்கூட்டணியினரின் அரசாங்கம் பதவிக்கு வந்த பின் சாதாரண தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிலாளர்களைக் கூட அடக்குவதற்கு குண்டாந்தடிகளுடன், துப்பாக்கிகளுடன் னுள் தொழிலாளர்கள் போவதற்கோ அல்லது வெளியே செல்வதற்கோ 15 மைலுக்கு அப்பாலுள்ள பதுளை பொலிஸ் அதிபரிடம் உத்தரவு பெற வேண்டும் என தடை செய்யப்படுகின்றனர். கீனுகலையில் என்ன நடைபெறுகிறது என்ற செய்தியைக் கூட வெளியே அறிய முடியாதவாறு . . வகு அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது பொலிஸ்படை. (கீனுகலை சம்பவம்பற்றி இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கத்தின் தலைவர் தோழர் என். சண்முகதாசன் வன்மையாகக் கண்டனம் தெரிவித்து பிரதமருக்கு எழுதிய கடிதம் கடைசிப் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

இந்நாட்டின் தேசிய வருமானத்தின் முதுகெலும்பாகவுள்ள தொழிலாளர்களில் இருவரை சுட்டுக் கொன்ற பொலிஸ்படை, இந்நாட்டின் தேசிய வளத்தைச் சுரண்டிச் சூறையாடிச் செல்லும் அந்நிய ஏகாதிபத்திய கொள்ளையர்களின் ஏஜெண்டுகளான வெள்ளையர்களைப் பாதுகாக்கின்றது. இதன் மூலம் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, பெரும் முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளின் நலனைப் பாதுகாக்கும் காவல் நாயாக பொலிஸ்படை செயல்படுவதை கீனுகலை சம்பவங்கள் மேலும் அம்பலமாக்குகின்றன.

யோகஸ்தர்களும் ஐக்கியத்துடன் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். இரண்டு மாதங்களைக் கடந்துவிட்ட இவ் வேலை நிறுத்தத்தில் 200க்கும் அதிகமான சிங்களத் தொழிலாளர்களும் கலந்துகொண்டுள்ளார்கள்.

இந்த வேலை நிறுத்தத்தைத் தீர்ப்பதற்கு தொழிற்சங்க மட்டத்தில் எடுத்த நடவடிக்கைகள் பயனற்றுப் போயின. கடந்த ஆகஸ்ட் நடுப்பகுதியில் பதுளை மாவட்டத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் இவ் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தமும் செய்தனர். எனினும் வெள்ளைத்

## சடலங்களை கொடுக்க மறுத்தது "மக்கள் அரசாங்கத்தின்" பொலிஸ்

பொலிஸ்படை ஏவிவிடப்படுகிறது. கீனுகலையில் பொலிஸின் அடக்குமுறை நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை அடைந்து அங்கு ஒரு பொலிஸ் ராஜ்யமே நடைபெறுகிறது.

கீனுகலையில் தோட்ட லைன் காம்பிராக்கள் காலியாகக் கிடக்கின்றன. இளம் பெண்கள் காடுகளில் பதுங்கியிருக்க வேண்டியுள்ளது. தோட்டத்தி

கீனுகலை தோட்டத்தை 12 மைல்களுக்கு அப்பாலுள்ள குயின்ஸ்டவுண் குருப்புடன் இணைப்பதையும், அந்நிய ஏகாதிபத்திய சுரண்டல்காரர்களின் ஏஜெண்டும் படுமோசமான தொழிற் சங்க விரோதி வெள்ளையன் சமர்வில் கீனுகலை தோட்டத் துரையாக நியமிக்கப்பட்டதையும் எதிர்த்து கடந்த ஜுன் 13ந் திகதியிலிருந்து செங்கொடி சங்கத்தின் தலைமையில் கீனுகலை தோட்டத் தொழிலாளர்களும், இலங்கை தோட்ட உத்தியோகஸ்தர்கள் சங்கத் தலைமையில் தோட்ட உத்தி

தோட்ட நிர்வாகத்தினர் பிடிவாதமாக வேலை நிறுத்தத்துக்கு தீர்வுகாண முன்வர மறுக்கின்றனர்.

கீனுகலை வேலைநிறுத்தத்தை சீர்குலைக்க வெள்ளைத் தோட்ட நிர்வாகிகள் பல சூழ்ச்சிகளைக் கையாண்டார்கள். தொழிற் சங்க விரோதி சமர்வில்லை தோட்டத்துக்குள் அனுப்ப முயன்றார்கள். ஆனால், தோட்டத்துக்குள் நுழைய அவனால் முடியவில்லை. தொழிலாளர்களினதும், தோட்ட உத்தியோகஸ்தர்களினதும் ஒன்று

8-ம் பக்கம் பார்க்க

## கீனுகலை தியாகிகளின் குடும்பத்திற்கு அனுதாபம்

பதுளை கீனுகலை தோட்டத்தில் பொலிஸின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் உயிர் இழந்த தோழர்கள் பீ. ராமையா, அழகர்சாமி ஆகியோரின் குடும்பத்தினருக்கு, இலங்கை தொழிற் சங்க சம்மேளனமும், இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கமும் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, மறைந்த வீரத் தியாகிகளுக்கு செங்கொடி தாழ்த்தி வீர வணக்கத்தையும் செலுத்துகின்றன.

| | |
|---|---|
| வொட்சன் பெர்னாந்து | என். சண்முகதாசன் |
| தலைவர் | தலைவர் |
| (இலங்கை தொழிற் சங்க சம்மேளனம்) | (இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கம்) |

* கீனுகலையில் இரு தொழிலாளர்களை சுட்டுக் கொன்று, அடக்குமுறை அட்டூழியம் புரியும் பொலிஸை கண்டித்தும்;

* தியாகிகள் ராமையா, அழகர்சாமிக்கு வீர வணக்கம் செலுத்தவும்;

## செப்டம்பர் 9ந் திகதி மலையகமெங்கும் அடையாள வேலை நிறுத்தம் செய்யுங்கள்

இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கம்.

நம்மைச் சுற்றி ........ நவம்

# "தங்கமூளை" நிதி அமைச்சர் உலக வங்கியிடம் சரணடைகிறார்

கடந்த தேர்தல் மேடைகளில் முக்கூட்டணியின் தலைவர்கள் குறிப்பாக "தங்கமூளை" என். எம். பெரேரா, யு. என். பி. நாட்டை விற்றுவிட்டது; அதனால் நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. யு. என். பி. வாங்கியுள்ள கடன்களை அடைக்க மூன்று தலைமுறைகளாகும்; திறைச்சேரிகாலியாகக் கிடக்கிறது என்றெல்லாம் கூறி, நான் நிதி அமைச்சரானால் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பேன், சோஷலிஸத்தைக் கொண்டுவருவேன், அதற்கு "பணம் எங்கிருந்து திரட்ட வேண்டுமென்பதை" நான் அறிவேன், "பணம் இருக்கும் இடத்தில் கைவைப்பேன்" என நாக்கில் நீர்வற்றும் அளவுக்கு முழங்கினார்.

இந்த "முழக்கத்தை" அப்பாவி மக்களும் நம்பினார்கள். இவர்கள் பதவிக்கு வந்ததும் இரவுபோய் பொழுது விடிவதற்குள் சோஷலிஸத்தைக் கொண்டுவருவார்கள், அந்நிய ஏகாதிபத்தியவாதிகளின் இரும்புப் பிடியிலிருந்து நாட்டையும், நாட்டின் பொருளாதாரத்தை மீட்பார்கள், ஏகாதிபத்தியவாதிகளின் தோட்டங்களையும், தொழில்களையும், வர்த்தக ஏஜென்சிகளையும் பறிமுதல் செய்வார்கள், உள்நாட்டு முதலாளிகளையும், நிலப்பிரபுக்களையும் கசக்கிப் பிழிந்து "பணம் திரட்டுவார்கள்" என்றெல்லாம் பகல் கனவு கண்டார்கள்; தமது ஓட்டுக்களை குவித்தார்கள்; முக்கூட்டணியினரை வெடி முழக்கத்துடன் பதவியில் அமர்த்தினார்கள்.

முக்கூட்டணி அரசாங்கத்தில் சமசமாஜக் கட்சியின் அமைச்சர்களுள் ஒருவரான நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்க திறைச்சேரியை நிரப்ப, சோஷலிஸத்தைக் கொண்டுவர தனது "தங்கமூளை"யை பிரயோகித்து "பணம் எங்கிருந்து திரட்டப்படவேண்டுமென்பதை" செயலில் காட்டி வருகிறார்.

டாக்டர் என். எம். பெரேரா தமது "பணம் திரட்டும்" முதல் நடவடிக்கையாக, வேலையில்லாத் திண்டாட்டத்தாலும், வாழ்க்கைச் செலவினங்களின் உயர்வால் படும் நரக வேதனையிலிருந்து மீட்சி கிடைக்கும் என நம்பிய உழைக்கும் மக்களின் பசித்த வயிற்றில் ஓங்கி அடித்தார். "ஒரு நாள் சம்பளத்தை தியாகம் செய்யுங்கள்" என உழைக்கும் மக்களிடம் கூறி, அவர்களின் மௌனமான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் "பணம் திரட்டினார்." அதுமட்டுமல்ல, நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, "பணம் இருக்கும் இடம்" அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பிலிருக்கும் உலக வங்கி என்பதை அறிந்து காவடி தூக்கி "பணம் திரட்டுகிறார்." அமெரிக்க ஏகாதிபத்தியத்தின், பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் நம்பிக்கைக்குரிய நண்பன் என்பதை நிரூபித்து "பணம் திரட்டி" முக்கூட்டணி அரசாங்கத்தின் முதல் பட்ஜெட்டை சமர்ப்பிக்கக் காத்திருக்கிறார் என். எம்.

தேர்தல் கால கூட்டங்களில் ஓட்டுப் பொறுக்குவதற்காக "பணம் இருக்கும் இடத்தையும்," "பணம் எங்கிருந்து திரட்டப்பட வேண்டுமென்பதையும்," தான் அறிந்திருப்பதாகக் கூறினார். ஆனால் அந்த இடங்களை கூறவில்லை. சாமர்த்தியமாக மறைத்தார். பதவிக்கு வந்ததும் அந்நிய ஏகாதிபத்திய பிடிப்பிலிருந்து இந்த நாட்டு பொருளாதாரத்தையும், சுயாதீனத்தையும் மீட்பதற்குப் பதிலாக அந்நிய ஏகாதிபத்தியங்களின் தேர்ச்சில்லுகளிலே இலங்கையை கட்டி வைக்க முனைகிறார். ஏகாதிபத்தியவாதிகளின் பெரும் தோட்டங்கள், வர்த்தக ஏஜென்சிகள், இந்த நாட்டில் கோடிக் கணக்கில் சுரண்டிச் செல்வதை தடுக்க என். எம். விரும்பவில்லை, தோட்ட தொழில் அமைச்சர் கொல்வினும் விரும்பவில்லை.

சமசமாஜக் கட்சியின் தலைவரான டாக்டர் என். எம். பெரேராவின் "தங்கமூளை" அந்நிய ஏகாதிபத்திய, முதலாளித்துவ நலன்களின் முன், நிலப்பிரபுத்துவ சொத்துடைமையின் முன் உருகிவிடும் எளிய "ஈயமூளை"யாக இருப்பதை மக்கள் காண்கிறார்கள்.

சமசமாஜ ட்ரொட்ஸ்கியவாதிகள் உலகில் எங்கெங்குள்ளார்களோ அங்கெல்லாம் ஏகாதிபத்தியத்துக்கும், சுரண்டும் வர்க்கங்களுக்கும், அதிகார வர்க்கத்துக்கும் விருப்பமுடன் சேவை செய்பவர்களாகவே இருக்கிறார்கள். அதை "ஈயமூளை" என். எம். பெரேராவும், சமசமாஜக் கட்சியின் தலைவர்களும் இந்நாட்டில் செய்கிறார்கள். சுரண்டும் வர்க்கம், சுரண்டும் வர்க்கத்துக்குச் சேவை செய்கிறது.

★

## வேலை கேட்கும் வாலிபர்கள் முக்கூட்டணி எம்.பி.க்களால் ஏமாற்றப்பட்டார்கள்

முக்கூட்டணியை பதவியில்' அமர்த்துங்கள்; இரு மாதங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு முடிவு கட்டுவோம்; எல்லோருக்கும் வேலை கொடுப்போம் என கடந்த தேர்தலின் போது முக்கூட்டணியினர் மூச்சுக்கு முந்நூறு தடவை மேடைகளில் பிரச்சாரம் செய்தார்கள். இப் பிரச்சாரத்தின் மூலம் ஆயிரக் கணக்கான வாலிபர்கள் தமது வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு முடிவுவரப்போகிறது என்ற நம்பிக்கையில் முக்கூட்டணியினருக்கு இரவு பகல் தேர்தல் வேலை செய்தார்கள்.

தேர்தல் முடிந்தது. முக்கூட்டணியினர் வெற்றிக் கோஷங்களுடன். பதவியில் அமர்ந்தனர். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவோம், வேலை தருவோம் எனக்கூறிய வாக்குறுதி நிறைவேற்றப்பட்டதா? இல்லை, இல்லை. ஆனால், வாக்குறுதியின் படி வேலைதாருங்கள் என விடாக்கண்டர்களாக முக்கூட்டணி எம். பி.க்களை பின் தொடர்ந்த வாலிபர்கள் ஏமாற்றப்பட்டார்கள் தமக்கு தேர்தல் வேலை செய்த வாலிபர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு 'பத்திரத்தை'க் கொடுத்து, இதிலுள்ள கேள்விகளுக்கு பதில் எழுதி நிரப்பித் தாருங்கள் வேலை பெற்றுத் தருவோம் என எம். பி. க்கள் கூறினார்கள்.

அந்தப் பத்திரத்தில் தந்தை செய்யும் தொழில், விபரம், தாய்செய்யும் தொழில், சகோதர சகோதரிகள் இருந்தால் அவர்கள் செய்யும் தொழில், வேறு வருமானம், குடும்ப வருமானம், படிப்பு இத்தியாதி கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. இந்த பத்திரத்தை பெற்ற வாலிபர்கள் தமக்கு உடனே வேலை கிடைத்துவிடும் என்று நம்பினார்கள். அவர்களது தாய் தந்தையரும் தமது பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கப் போகிறது என மகிழ்ந்தார்கள். அவசரம் அவசரமாக நிரப்பிக் கொடுத்தார்கள். குறிப்பிட்டுச் சொல்வதாயிருந்தால் அச்சடித்த இப் பத்திரங்களுக்கு அமோக கிராக்கி ஏற்பட்டது.

ஆனால், நடந்தது என்ன? பத்திரம் நிரப்பியவர்களுக்காவது வேலை கிடைத்ததா? இந்த பத்திரங்களை நிரப்பி வாங்கிய எம். பிக்கள் தம்மை பொறுத்தவரை பிரச்சினையிலிருந்து தப்பிவிட்டதாக நினைத்தார்கள். பத்திரம் நிரப்பியவர்களோ இன்று, அல்லது நாளை தம்மை வேலைக்கு வருமாறு அழைப்புவரும் என ஏங்கிக் கிடக்கிறார்கள். முதலாளித்துவ பாராளுமன்ற சந்தர்ப்பவாத ஏமாற்றைதிறமையாகக் கையாண்டு வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் வாலிபர்கள், பட்டதாரிகளின் வாக்குகளை சூறையாடின முக்கூட்டணியினர் இப்பொழுது கையை விரிக்கின்றனர்.

இத்தகைய ஏமாற்றுகளுக்குப் பலியான ஆயிரக்கணக்கான வாலிபர்களின் கண்கள் இப்போது சிறிது சிறிதாக உண்மையை - முதலாளித்துவ பாராளுமன்ற மோசடியை - உணர்ந்து வருகின்றன. இந்த உணர்வு முதலாளித்துவ பாராளுமன்ற ஏமாற்றை நிர்மூலமாக்கும்.

★

## தொழிலாளர்களுக்கு எதிராக, பெரும் முதலாளிகளைப் பாதுகாக்க பொலிஸ் படை ஏவிவிடப்படுகிறது

தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு எதிராக முக்கூட்டணி அரசாங்கம் கடைப்பிடிக்கும் போக்கு கூடிக்கொண்டே போகிறது.

பதுளை மாவட்டத்திலுள்ள கீனகலை குருப்பில் கடந்த இரு மாதங்களுக்கும் மேலாக தொழிலாளர்களும், தோட்ட உத்தியோகஸ்தர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இந்த வேலைநிறுத்தமும் தீர்வுகாணப்படாமல் நீண்டு கொண்டே செல்கிறது. தொழிற் சங்க விரோதியான ஏகாதிபத்திய வெள்ளைத் தோட்ட நிர்வாகியை எதிர்த்து இவ் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. இந்த வேலை நிறுத்தத்தை தீர்ப்பதற்கு முக்கூட்டணி அரசாங்கம் தகுதியான நடவடிக்கை ஒன்றையும் எடுக்காமல் பின்வாங்குகிறது. இதன் மூலம் இந்த நாட்டின் வளத்தை கொள்ளையடிக்கும் தோட்ட முதலாளிமார் சங்கம் வேலைநிறுத்தம் செய்துள்ள தோட்டத் தொழிலாளர்களையும், தோட்ட உத்தியோகஸ்தர்களையும் பட்டினி போட்டு வதைக்க மறைமறைமுகமாக உதவுகிறது.

கடந்த 1ந் திகதி பொலிஸின் உதவியுடன் அந்த வெள்ளைத் தோட்டத்துரை தோட்டத்துக்குள் பிரவேசிக்க முயன்றதை, தொழிலாளர்கள் எதிர்த்த போது, பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இரு தொழிலாளர்களை கொன்றதோடு, பலரை படுகாயங்களுக்குள்ளாக்கியுள்ளது. ஏகாதிபத்திய வெள்ளை முதலாளிகளுக்கு சோஷலிஸம் பேசும் முக்கூட்டணியின் பொலிஸ்படை தொழிலாளர்களை சுட்டுக் கொல்வதன் மூலம் ஊழியம் செய்கிறது.

பக்கா யு. என். பி.காரனை ரஸ்கின் பெர்னாண்டோவின் வெலோனா தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் மீது முக்கூட்டணியின் பொலிஸ் ஏவிவிடப்பட்டு தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டதோடு, கண்ணீர்ப் புகையும் பிரயோகிக்கப்பட்டது.

சென்ற வாரத்தில் அக்மி அலுமினிய கம்பெனியில், வெள்ளை முதலாளிகளுக்கு எதிராக நடைபெற்ற வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்கு தொழில் அமைச்சர் முன்வந்தார். வேலை நிறுத்தத்துக்கு காரணமான தொழிலாளர்களின் கோரிக்கைகளை அமைச்சர் பொருட்படுத்தாமல் கட்டாய மத்தியஸ்தத்திற்குவிட்டு இவ் வேலை நிறுத்தத்தை சட்ட விரோதமாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

அதுமட்டுமல்ல, போனூர்ஸ் கம்பெனியில் சேமலாபநிதியை மூன்று வருடங்களாகக் கொடுக்காத நிர்வாக மனேஜரை தொழிலாளர்கள் கம்பெனியிலிருந்து வெளியேற்றி புதிய நிர்வாக மனேஜரை நியமியுங்கள் என நிர்வாகிகளைக் கேட்டனர். தொழிலாளர்களின் இந்த கோரிக்கையை சுமூகமாக தீர்த்து வைக்க முக்கூட்டணி அரசாங்கம் முயலவில்லை. ஆனால், கம்பெனியை விட்டு, தொழிலாளர்களை வெளியேற்றவும், முதலாளிகளைப் பாதுகாக்கவும் முக்கூட்டணியின் பொலிஸ்படை முன்வந்து உதவியது. போனூர்ஸ் முதலாளிகள் கதவடைப்புச் செய்து தொழிலாளிகளை வெளியே நிறுத்தியுள்ளார்கள். பொலிஸ்படை போனூர்ஸ் முதலாளிகளைப் பாதுகாக்க கைகளில் ஆயுதம் ஏந்தி கம்பெனி வாசலில் நிற்கிறது.

இந்த சம்பவங்களும், முக்கூட்டணி அரசாங்கத்தின் செயல்களும், இலங்கை தொழிற் சங்க வரலாற்றில் தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமைகளை மீண்டும் பாதுகாக்கப் போராட வேண்டியுள்ளதையும், எதிர்காலப் போராட்டங்கள் எத்தகையதாய் இருக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது.

# முக்கூட்டணி அரசாங்கமும் ஆசிரியர்களை ஈவிரக்கமின்றி பழிவாங்குகிறது

மக்களை ஏமாற்றுவதற்காக ''மக்கள் அரசாங்கம்'' என்று கூறிக்கொள்ளும் முக்கூட்டணி அரசாங்கம் பதவியேற்று மூன்று மாதங்கள் கடந்து விட்டன. எனினும் ஆசிரியர்களின் பிரச்சினை பிரச்சினையாகவே இருக்கிறது. மேலும், மேலும் ஆசிரியர்கள் பழிவாங்குதலுக்கும், பலவித நெருக்கடிகளுக்கும் ஆளாக வேண்டியுள்ளது. இந்த நாட்டின் கல்விப் பிரச்சினையிலுள்ள நானாவித நெருக்கடிக்குள் ஆசிரியர்களும் அவதிக்குள்ளாக வேண்டியுள்ளது. இந்த அரசாங்கம் இதுவரை ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ''இடம்மாறுதல்'' செய்வதை தனது கடமையாகக் கருதுகிறது.

1965ல் நடைபெற்ற தேர்தலுக்குப்பின் யு. என். பி.பதவியில் அமர்ந்தவுடன் இந்நாட்டு ஆசிரியர்கள் அனுபவித்த கொடுமைகளில் ஒன்றுவது இதுவரை நிறுத்தப்படவில்லை. யு. என். பி. அரசாங்கம் ஆசிரியர்களை பழிவாங்குவதற்காக நினைத்தவாறு இடம் மாற்றம் செய்து கொடுமைப்படுத்தியது. ஆசிரியர் ஒருவரை ஒரு நாள் பண்டாரவளைக்கும், மறுநாள் புத்தளத்திற்கும், அதற்கடுத்தநாள் அம்பாந்தோட்டைக்கும் இடம் மாறுதல் செய்ததையும், பிள்ளைகள் கம்பஹாவில் படிக்கும்போது ஆசிரியத்தாய் திஸ்ஸமாராமைக்கும், ஆசிரியத் தகப்பன் திரிகோணமலைக்கும் மாற்றப்பட்ட நிகழ்ச்சிகளையும், சுகயீனமாயிருந்த 4 ஆசிரியர்கள் தூர இடங்களுக்கு இடம் மாற்றப்பட்டு அதனால் இறந்து போன சம்பவங்களையும் இந்நாட்டுமக்கள் மறந்துவிடவில்லை, இப்படி ஆரம்பித்த கொடுமைகள், இன்றும் ஆசிரியர்களை துன்பத்திற்குள்ளாக்குகின்றன.

### கடந்த கால பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடர்கின்றன

கடந்த தேர்தலின் போது பெரும்பான்மையான ஆசிரியர்களின் ஆதரவைப் பெற்று பதவியில் அமர்ந்த முக்கூட்டணி அரசாங்கம் ஆசிரியர்களை மனநிம்மதியோடு தமது கடமைகளைச்செய்ய அனுமதிக்கவில்லை. அரசாங்கத்திடம் ஆசிரியர்கள் எதிர்ப்பார்த்த சலுகைகள் நம்பிக்கையற்றுப் போய்விட்டன. ''புள்ளடி புரட்சி''யின் மூலம் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி என்னவென்றால், தேசிய உடை அணிந்தவரின் நாற்காலியில் கழுசான் அணிந்தவர் அமர்ந்ததுதான். கடந்த காலத்தில் நடத்தப்பட்ட பழிவாங்கும் செயல்கள் இப்போது கூடுதலாகக் கையாளப்படுகிறது. தமது ஆதரவாளர்களுக்கு சலுகையும், அவர்களுக்குத் தேவையான இடங்களுக்கு இடம்மாற்றலும் சுலபமாகக் கிடைக்கிறது. மற்றவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். அண்மையில் ஒரு பாடசாலையின் அதிபர் திடீர் இடம் மாற்றம் செய்யப்பட்டதைக் கேட்டு அங்கு உப ஆசிரியையாகக் கடமையாற்றிய அவரது மனைவி மயங்கி விழுந்து இறந்த செய்தி வெளியாகியுள்ளது.

நோயுற்ற தந்தைக்கு பணிவிடை செய்து கொண்டிருந்த ஒரு ஆசிரியரை மன்னாருக்கு இடம் மாற்றினார்கள். வயது போன தனது தாயைப் பாதுகாக்கவேண்டியிருந்த ஒரு ஆசிரியையை தூர இடத்துக்கு இடம் மாற்றம் செய்தபோது அவர் தனது தாயை மீண்டும் சந்திப்பேனோ எனக்கதறி அழுதார். இந்த முறையில்தான் இந்த அரசாங்கமும் கல்வித்துறையில் தனது கைவரிசையைக் காட்டுகிறது. இந்த செய்கைகளை எதிர்த்து ஆசிரியர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டவுடன், ஜூலை முதல் தேதியிலிருந்து பதினைந்தாம் தேதிவரைக்கும், அதன் பின் ஆகஸ்ட் மாதத்திலிருந்து பூரணமாக ஆசிரியர்கள் இடம் மாறுதல் செய்யப்படமாட்டார்கள் என அரசாங்கம் கூறியது, ஆனால், ஆளும் கட்சிகளின் பாராளுமன்ற அங்கத்தவர்கள் தமக்குப் பிடிக்காத ஆசிரியர்களை இடம் மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இத்தகைய இடம் மாற்றும் பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடர்வதனால் ஆசிரியர்கள் மன நிம்மதியாக திறமையாக மாணவர்களுக்குப் போதிக்க முடியாமல் இருக்கிறது. அதேவேளையில் இந்த இடம் மாறுதல்களிலிருந்து தப்புவதற்காக சிலர் லஞ்சம் கொடுக்கவும், கைக்கூலிகளாக மாறவும் வேண்டிய நிலையில் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆளும் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களின் விருப்பு வெறுப்புக்கேற்ப ஆசிரியர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். ஒரே பாடசாலையில் அதிகமான ஆசிரியர்கள் குவிக்கப்பட்டு ஏதும் வேலைசெய்யாமல் சம்பளம் பெறுகிறார்கள். மறுபுறம் நூற்றுக்கணக்கான மாணவர்கள் உள்ள பாடசாலைகளில் ஒரு ஆசிரியர் அல்லது இருவர் போதிக்க வேண்டியுள்ளது. இதனால் நமது மாணவர்களின் கல்வித்தரம் பாதிக்கப்படுவதை ஆளும் கட்சியிலுள்ள முக்கியஸ்தர்கள், அமைச்சர்கள் கவனத்தில் எடுப்பதில்லை. அவர்களின் குழந்தைகள் உயர்தர கல்லூரிகளில், இங்கிலாந்து, பிரான்ஸ், இந்தியா, போன்ற நாடுகளில் கல்விகற்க அனுப்பப்படுவதால் இந்த நாட்டிலுள்ள சாதாரண உழைக்கும் மக்களின் குழந்தைகளின் கல்வியில் அக்கறையோ, கவனிப்போ இன்றி இருக்கிறார்கள்.

### ஆசிரியர் தொழிற் சங்கத் தலைவர்கள் வாயடைத்துக் கிடக்கின்றனர்

ஆசிரியர்களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தீர்க்கப் புறப்பட்டுள்ளோம் எனக் கூறிய ஆசிரியர் சங்க முக்கியஸ்தர்கள், இன்று ஆட்சியின் கைப்பாவைகளாக மாறி பதவி உயர்வுகளைப் பெற்றுவிட்டதால் ஆசிரியர்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை அவர்களின் பிரச்சினை தீர்ந்தமாதிரியேதான்.

கடந்த தேர்தலுக்குப் பின் தமக்கு விடிவு ஏற்படும் என்று எண்ணிய ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இன்று, அல்லது நாளை தனக்கு என்ன நடக்குமோ, தூரப் பிரதேசங்களுக்கு இடமாற்றல் உத்தரவு கிடைக்குமோ என மனக்கிலேசமடைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள்.

இந்த நிலையிலிருந்து ஆசிரியர்கள் மீள வேண்டுமேயானால் இன்றைய வர்க்க சமூகத்திலுள்ள கல்வி அமைப்பையும், நிர்வாக முறையையும், பழிவாங்கும் நடவடிக்கைகளையும் எதிர்த்துப் போராட முன்வரவேண்டும். முதலாளித்துவ அரசியல் வாதிகளின் போலி சோஷலிஸப் பிரச்சார மாயைகளுக்குப் பலியாகக் கூடாது என்பதை புத்திஜீவிகளான ஆசிரியர்கள் உணர வேண்டும்.

### இவர்களின் கண்கள் குருடாகி விட்டனவா?

தேர்தல் காலத்தில் ஆசிரியர்களின் பாதுகாவலர்கள் எனக் கூறியவர்கள் இன்று ''சேவையின் அத்தியாவசியம்'' எனக் கூறி ஆசிரியர்களை பழிவாங்கும் அநீதியைக் கண்டும் வாய்பேசா ஊமைகளாய் இருப்பதன் காரணமென்ன? ஆசிரியர்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற ஆசனங்களில் அமர்ந்ததும், அமைச்சர்களானதும் இவர்களின் கண்கள் குருடாகிவிட்டனவா? ''மக்கள் அரசாங்கம்'' எனக் கூறிக்கொண்டு ஆசிரியர்களுக்கும், இந்த நாட்டு மக்களின் கல்விக்கும் செய்யும் தீங்குகளை ''மக்களின் சேவை'' என நேர்மையுள்ளம் கொண்ட எவரும் சொல்ல முடியுமா?

நாமும் ஆசிரியர்களாகத்தான் இருந்தோம் எனக் கூறும் கல்வி அமைச்சரும், உப அமைச்சரும் இன்று தாம் செய்வது அநீதி என்று தெரிந்துகொண்டும் இவைகளைச் செய்வதேன்? செய்வதற்கு துணைபுரிவதேன்? என்ற கேள்விகள் தானாக எழும்புகின்றன. இத்தகைய செயல்களால் நாட்டின் கல்வி சீர்குலைந்து போவதைப்பற்றி இன்று பதவியில் இருப்பவர்களுக்கு கவலையில்லை. ஆனால், இவர்களின் தீய நடவடிக்கைகளை கண்டும் காணாதவர்களாக தேசபக்தியுள்ள எந்த ஆசிரியனாலும் இருக்க முடியாது.

### கிளர்ந்தெழுந்து போராட வேண்டும்

இந் நாட்டின் உழைக்கும் மக்களின் குழந்தைகள் இங்குள்ள பாடசாலைகளில்தான் கல்விகற்க வேண்டியுள்ளது; இந் நாட்டு ஆசிரியர்களும் இங்குள்ள பாடசாலைகளில்தான் போதிக்க வேண்டியுள்ளது; கல்விகற்கும் உழைக்கும் மக்களின் குழந்தைகளும், ஆசிரியர்களின் குழந்தைகளும் இந்த நாட்டில்தான் கல்வி கற்று வாழவேண்டியுள்ளது. எனவே, ஆசிரியர்களுக்குத் தீங்கிழைப்பதன் மூலம் கல்விக்கு உலைவைக்கும் பாதகமான செயல்களை எதிர்த்து ஆசிரியர்கள் கிளர்ந்தெழ வேண்டும்.

இன்றுள்ள பிரச்சினைகள் இன்று அல்லது நாளை தானாக தீர்ந்துவிடும் என்று ஆசிரியர்கள் கருதினால் அது இந்த நாட்டு உழைக்கும் மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

இன்றுள்ள முதலாளித்துவ பாராளுமன்ற போலி ஜனநாயக அமைப்பின் கீழ் எந்தவொரு அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் அது உண்மையில் உழைக்கும் மக்களுக்கு சேவை செய்யும் அரசாங்கமாக இருக்காது. அவைகள் தமது முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பை பாதுகாக்கும் கருவிகளாகவே செயல்படும் என்பதை தமக்கு முன்பு நடந்த, இப்போது நடக்கும், சம்பவங்களிலிருந்து ஆசிரியர்கள் புரிந்துகொள்ளலாம். முன்பும், இப்போதும் ஆசிரியர்கள் தாக்குதலுக்கு உள்ளானார்கள். திடீர் இடமாற்றம், வேலை நீக்கம், தண்டனைகள் குறையவில்லை. அப்படியேதான் உள்ளன. ஆனால் வாய்ப் பேச்சு மாத்திரம் ஆசிரியர்களின் குறைகளைத் தீர்ப்போம் என்கிறது.

எனவே, நாட்டின் பொது நெருக்கடியுடன், பொதுப் பிரச்சினையுடன் ஆசிரியர்களின் பிரச்சினையும் பிணைந்துள்ளது. ஆசிரியர்களின் உரிமைகளுக்கான போராட்டம் வெகுஜனப் போராட்டங்களின் ஒரு அங்கம் என்பதையும், தமது போராட்டத்தின் வெற்றி உழைக்கும் மக்கள் நடத்தும் போராட்டத்தில் தங்கியுள்ளது என்பதையும், உழைக்கும் வெகுஜனங்களின் போராட்டம் ஆசிரியர்களின் போராட்டம் என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும். இன்றுள்ள பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண உழைக்கும் மக்கள் கையில் ஆட்சியின் அதிகாரம் கைமாறவேண்டும். அதற்கான போராட்டத்தில் தொழிலாளருடனும், விவசாயிகளுடனும் ஆசிரியர்கள் ஐக்கியப்பட்டு பிழையற்ற தலைமையின் கீழ் புரட்சிகரப் போராட்டங்களில் ஈடுபட முன்வர வேண்டும்.

---

### சேகுவேரா இயக்கத்திற்கு உதவுவது யார்?

அமெரிக்கப் பத்திரிகையொன்றிலே காணப்பட்ட கருத்துத் துணுக்கு:

''ஸ்டாலின் காலத்திலே ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ட்ரொட்ஸ்கியவாதம் எத்தகைய பங்கையும் பாத்திரத்தையும் வகித்ததோ, அதே முக்கியத்துவத்தை நாம் தற்காலத்திலே (மாசேதுங் யுகத்தில்) சேகுவேரா இயக்கத் தத்துவத்திற்கு அளிக்க வேண்டும்.''

இந்தக் கூற்றுக்கு விளக்கம் தேவையில்லை. அமெரிக்காவிலிருந்து சேகுவேரா இயக்கத்துக்கு வரக்கூடிய உதவிக்கும், ஆதரவுக்கும் இது நல்ல எடுத்துக்காட்டு அல்லவா? ட்ரொட்ஸ்கியவாதம் ஸ்டாலின் யுகத்திலே புரட்சிகர இயக்கத்தைப் பிளவுபடுத்தியது. இன்று அந்தப் பணியைச் செய்ய முன்வந்திருப்பவர்கள் யார் என்பதை இந்நாட்டு மக்கள் தெரிந்து கொள்வதற்கு காலதாமதமாகாது.

தொழிலாளி

# உலகில் விடுதலைப் போராட்டங்களு

# புரட்சிக்கும் மகத்தான சேவை செய்

## சீன - அல்பேனிய நட்புறவு

**அல்பேனிய தொழிலாளர் கட்சியின் மத்திய கமிட்டியின் செயலாளர் தோழர் அன்வர் ஹோஷா ஜூன், 3ந் திகதி மகத்தான சீன மக்களின் மகோன்னத தலைவர் தோழர் மாஓவின் பெயரில் அல்பேனியாவில், வெ ஐ டெஜஸ் எனும் இடத்தில் அமைக்கப்படும் "மாசேதுங் ஹைட்ரோ-மின் சக்தி நிலையத்துக்கு" விஜயம் செய்தார். அங்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் தோழர் அன்வர் ஹோஷா ஆற்றிய முக்கியமான சொற்பொழிவை கீழே தருகிறோம்.**

**-ஆர்**

—சென்ற வாரத் தொடர்ச்சி

மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி, பொருளாதார அபிவிருத்தியிலும், விஞ்ஞானத்துறையிலும் தொல்லைகளையும், ஒழுகின்மைகளையும் ஏற்படுத்தி சீன மக்கள் குடியரசின் பாதுகாப்பு சக்தியையும் பலவீனப்படுத்துமென்று கம்யூனிஸத்தின் எதிரிகள் எண்ணியிருந்தார்கள். இந்த எண்ணமும் பொய்த்துப் போயிற்று; அதற்கு எதிராக மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி 70 கோடி சீன மக்களின் சோஷலிஸ விழிப்புணர்ச்சியையும், புரட்சிகர உற்சாகத்தையும் அளவிட முடியாதபடி உயர்த்தியுள்ளதோடு, சீனவின் சோஷலிஸ உற்பத்தியிலும், நவீன விஞ்ஞான தொழில் நுட்ப அபிவிருத்தியிலும் ஒரு புதிய உத்வேகத்தை உண்டுபண்ணி மக்கள் சீனத்தின் தற்காப்பு சக்தியையும் எல்லாவகையிலும் பலப்படுத்தியுள்ளது.

சீனவிற்கு விஜயம் செய்யும் எம் நாட்டு ஆண்களும், பெண்களும் சீனச் சந்தையில் பொருட்கள் இன்றிருப்பது போல் என்றும் நிறைந்திருக்கக் கண்டதில்லை என்று கூறுவதாக சீனவிலிருந்து வெளிவரும் பல்வேறு அறிக்கைகள் கூறுகின்றன. அங்கு எல்லாப் பொருட்களும் அளவுக்கு அதிகமாக நிறைந்திருக்கக் காணலாம். பூர்ஷுவா பத்திரிகையாளர்கள்கூட இதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. வெள்ளையைக் கறுப்பு எனக் கூறிப் பழகிக்கொண்ட மாஸ்கோ துரோகிகளின் கண்களுக்கு மட்டும்தான் இவை தென்படவில்லை. அவர்கள் இதைக் காணவிரும்பாமலும், இருக்கலாம். எப்படியிருந்த போதிலும் பரந்த வானத்தை ஒருகையால் அவர்களால் மறைக்க முடியுமா?

### மாஓ சிந்தனையின் மகத்தான வெற்றி

சீனவின் பலம், தொழில் நுட்ப விஞ்ஞான வளர்ச்சி, பொருளாதார சக்தி, கைத்தொழில் கலாச்சார முன்னேற்றம் ஆகியன செய்மதியை வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பியதன் மூலம் உலகிற்கு விளக்கமாகத் தெரிகின்றது. தோழமையுள்ள மக்கள் சீனத்தினதும், தோழர் மாசேதுங்கினதும் சரியான புரட்சிப் பாதைக்கு இது ஒரு புகழ் வாய்ந்த வெற்றியாகும். இந்த மாண்புமிக்க சாதனைகளும், சீனவின் அணுக்குண்டு பரிசோதனைகளும்: தன்னுடைய உற்பத்தி சக்திகளில் உறுதியுடன் நம்பிக்கை வைத்துக் கொண்டு, ஏகாதிபத்திய, திரிபுவாதிகளின் விரோதம் நிறைந்த முற்றுகையை நிர்மூலமாக்கிக்கொண்டு நவீன உலக விஞ்ஞானத்துறையிலும், தொழில் நுட்பத் துறையிலும் சீன மக்கள் குடியரசு உச்சக் கட்டத்தை அடைவதை விளக்கமாக நிரூபிக்கின்றன. சீன செய்மதி விண்வெளிக்கு அனுப்பப்பட்ட செய்தி விலைமதிப்பற்ற ஆயுதங்களின்மேல் சோவியத்—அமெரிக்க ஏகபோகத்திற்கும், உலகை ஆள்வதற்கு வகுக்கப்பட்ட எதிர்ப்புரட்சித் திட்டத்திற்கும் விழுந்த மரண அடியாக அமைந்துள்ளது. எல்லா மக்களும் ஏகாதிபத்திய அடக்குமுறையின் வெறுக்கத்தக்க நுகத்தடியிலிருந்து வெளியேறும் போராட்டத்திற்கு உற்சாகம் ஊட்டும் நிகழ்ச்சியாகக் கருதி மட்டற்ற மகிழ்ச்சி ஆரவாரத்துடன் இந்த நிகழ்ச்சியை வரவேற்கிறார்கள். உலகிலுள்ள எல்லா மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் புரட்சிவாதிகளும், மக்களும், மகத்தான சீன மக்கள் இது போன்ற இன்னும் சகல துறைகளிலும் சோஷலிஸத்திற்கும், கம்யூனிஸத்திற்குமான பெரும் வெற்றிகளைப் பெறுவதற்கு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுபோலவே, எமது கட்சியும், மக்களும் வாழ்த்துகின்றனர்.

ஆனல், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைத் தலைமையாகவும், சோவியத் திரிபுவாதிகளைக் கூட்டாகவும் கொண்டுள்ள ஏகாதிபத்தியவாதிகள் தாங்கள் அடைந்த தோல்விகளை ஏற்றுக்கொள்ள விருப்பமற்றவர்களாக இருக்கிறார்கள். மக்கள் சீனத்திற்கு எதிராக அவர்கள் தொடர்ந்து சதித் திட்டங்கள் தீட்டிக் கொண்டும், சீனவை ஆயுத முற்றுகையிடவும், சீனவுக்கு எதிராக போர்தொடுத்து ஆக்கிரமிப்பு நடத்துவதற்கும் தம்மை தயார் செய்துகொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் வீரமிக்க வியட்நாம் மக்களை அடிமைகொண்டு, அவர்களின் சுதந்திரப் போர்ச் சுடரை அணைத்து அவர்களின் எஜமானத்தை நீண்டகாலமாக முயற்சித்து வருகிறது. பல வருடங்களாகத் தொடர்ந்து போர்க்களத்தில் எண்ணற்ற துருப்புக்களையும், உபகரணங்களையும், இராணுவ ஆயுதங்களையும் கொண்டுவந்து குவித்தபோதிலும் வீரமிக்க வியட்நாம் மக்களின் வெல்லற்கரிய எதிர்ப்புக்கு— மாபெரும் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகத் தாக்குப்பிடிக்க முடியாமல் தவிக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும், அதன் அடிவருடிகளும் வியட்நாமில் தகுந்த பாடத்தை படித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு யுத்தத்தின் முடிவைத் தீர்மானம் செய்வது ஒரு தேசத்தின் அளவும், அதன் சக்தியுமல்ல; இராணுவ வீரர்களின் எண்ணிக்கையும், போர்க் கருவிகளின் தராதரமும் எண்ணிக்கையுமல்ல, அதற்கு மாறாக யுத்தத்திற்கான காரணமும் அதைச் செய்வோரின் மன எழுச்சியுமே யுத்தத்தின் முடிவைக் கடைசியில் தீர்மானம் செய்கின்றன.

### ஏகாதிபத்தியவாதிகளின் தோல்வியை உறுதிப்படுத்துகிறது

வியட்நாமில் தோல்விமேல் தோல்வி கண்டு திக்குத் திசை தெரியாமல் தடுமாறிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பிற்போக்குவாதி லொன்நொல்லுடன் சேர்ந்து இராணுவச் சதியை ஒழுங்கு செய்வதற்கும், கம்போடியாமேல் பகிரங்க ஆக்கிரமிப்புச் செய்வதற்கும் காட்டு மிருகங்கள் போல் விரைந்து சென்றார்கள். நீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒருவன் தன்னைக் காப்பாற்றுவதற்காக தன் தலைமுடியைத் தானே பற்றிக் கொள்ளும் கதையை இது நினைவூட்டுகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாமியர்களுக்கு எதிராகப் போராடுவது முடியாத காரியம் என்று கண்டுள்ளது. இருந்தும், கம்போடிய மக்களும் மற்றும் முழு இந்தோ—சீன மக்களும் ஒன்று சேரும் பொழுது அவர்களை வெல்லுவது மிகக் கஷ்டம் என்பதை இன்னும் இந்த ஏகாதிபத்தியவாதிகளுக்குப் புரியவில்லையே!

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்தச் செயலானது ராஜ்யத் தலைவர் நொறடம் சிஹானுக் தலைமையிலும், கம்போடிய தேசிய ஐக்கிய முன்னணியின் தலைமையிலும் கம்போடிய மக்களின் சக்திமிக்க போராட்டத்தை உருவாக்கியுள்ளது என்பது வெளிப்படை. இந்த ஆக்கிரமிப்புச் செயலானது முழு இந்தோ-சீன மக்களினதும் விடுதலைப் போராட்டத்தை மிக உயர்ந்த நிலைக்கு உந்தியதோடு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வெட்கப்படத்தக்க படுதோல்வியைத் துரிதப்படுத்துவதுடன், உறுதிப்படுத்துவதாகவுமுள்ளது. அல்பேனிய மக்களும் அவர்களின் அரசாங்கமும் தங்கள் முழு ஆதரவையும் நியாயமான இந்தோ—சீன மக்களின் இப் போராட்டத்துக்கு அளிப்பதோடு, இந்தோ-சீன மக்கள் தங்கள் உறுதிமிக்க இப் போராட்டத்தின் மூலம் எதிரிகளை முறியடித்து வெற்றியீட்டுவார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்துக் கொள்கிறார்கள்.



தோழர் அன்வர் ஹோஷா


### மே 20 அறிக்கையில் மாஓ கூறினர்

தோழர் மாசேதுங் தனது மே 20ந் திகதி அறிக்கையில் கூறினர்: அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு வியட்நாமிய மக்களோ, லாவோஸிய மக்களோ, அராபிய மக்களோ அல்லது மற்றெந்த நாட்டு மக்களோ பயப்படவில்லை; அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் உலக மக்களுக்குப் பயப்படுகின்றது. காற்றில் இலைகள் அசையும் ஓசையிலேயே அதற்கு உதறல் எடுக்கிறது. நியாயமான ஒரு செயல் அமோகமான ஆதரவையும், நியாயமற்ற ஒரு செயல் மிகக் குறுகிய ஆதரவையும் பெறுவதை எண்ணற்ற உண்மைகள் நிரூபிக்கின்றன. பலவீனமான ஒரு தேசம் பலமான ஒரு தேசத்தையும், ஒரு சிறிய தேசம் ஒரு ஒரு பெரிய தேசத்தையும் தோற்கடிக்க முடியும். ஒரு சிறிய தேசத்தின் மக்கள் போராட்டத்தில் கிளர்ந்தெழத் தயாரென்றால், ஆயுதங்களைத் தாங்கி தங்கள் நாட்டின் விதியை தங்கள் கைகளிலே இறுகப் பற்றிக் கொள்ளத் தயாரென்றால் நிச்சயமாக ஆக்கிரமிப்புச் செய்யும் ஒரு பெரிய தேசத்தைத் தோற்கடிக்க முடியும். இது வரலாற்றின் ஒரு நியதியாகும்.

தோழர் அன்வர் ஹோஷா தொடர்ந்து பேசுகையில், அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாம் யுத்தத்திலும், கம்போடியாவுக்குள் ஆக்கிரமிப்பை விரிவுபடுத்தியும் சமாதானம் விரும்பும் இப் பிரதேச மக்களின் விடுதலைப் போராட்டத்தைநசுக்குவதற்கு எண்ணுவதோடு, முழு இந்தோ-சீன பிரதேசத்தையும் யுத்தத்திற்கும், ஆக்கிரமிப்பிற்கும் உதவக்கூடிய ஒரு தளமாகமாற்றி அதன்மூலம் சோஷலிஸ நாடுகளை முக்கியமாக சீன மக்கள் குடியரசை ஆக்கிரமிக்க கருத்துக் கொண்

# ...களுக்கும் ...செய்கிறது

மிய மக்
மக்
க்களோ
ட்டு மக்
அமெ
தான்
ப்படுகின்
அசை
ற்கு உத
யமான
ன ஆத
ஒரு
ஆதர
எண்
நிரூபிக்
ஒரு
தேசத்
தேசம்
தையும்
ஒரு
மக்கள்
தெழக்



ங்களைத்
விதி
இறு
தயா
ஆக்கிர
பெரிய
க்க முடி
ஒரு

ஹாஷா
சையில்,
த்தியம்
னாலும்,
ஆக்கிர
த்தியும்
இப்
டுதலைப்
வதற்கு
இந்
தையும்
க்கிரமிப்
ஒரு
ன்மூலம்
முக்கிய
யரசை
கொண்

டிருக்கிறது. இது சீனாவுக்கு எதிராக ஏகாதிபத்திய—திரிபு வாதிகளைப் பிணைக்கும் ஓர் சதியாகும்.

### மக்கள் சீனத்தின் பாதுகாப்பு புரட்சியின் பாதுகாப்பு

ஆனால், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளினதும், சோவியத் ஏகாதிபத்திய கும்பலினதும், அவர்களது ஏவல் நாய்களினதும் எல்லா எதிர்ப் புரட்சிகரச் செயல்களும் முற்றுமுழுதாகத் தோல்வி அடைந்தே தீரும். ஏனெனில் அவர்களுக்கு எதிரில் தலைவர் மாஓவின் மார்க்சிஸ—லெனினிஸப் புரட்சிப் பாதையைப் பின்பற்றும் பிரமாண்டமான வெல்லற்கரிய சக்தியாகிய 70 கோடி சீன மக்களும் உறுதியாக ஒன்றென ஐக்கியப்பட்டு நிற்கிறார்கள். எனவே, அவர்களுடைய திட்டங்களெல்லாம் புரட்சிகர உலக மக்களின் விழிப்புணர்ச்சியுடன் கூடிய விட்டுக் கொடுக்காத போராட்டத்தின் முன்பு தோல்வி அடைந்தே தீரும். இம் மக்கள் சீனாவின் பாதுகாப்பு மிக முக்கியமானது எனக் கருதுகிறார்கள். தோழர் மாஓவினால் உற்சாக மூட்டப்பட்ட மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியினால் முன்னெப்பொழுதையும்விட பல முள்ளதாக உருவாகியுள்ள மக்கள் சீனம், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 9வது மாநாட்டின் சரித்திரப் பிரசித்தி பெற்ற தீர்மானத்தை ஆயுதமாக அணிந்து கொண்டு எவ்வித எதிர்ப்பையும் சமாளிக்கக் கூடிய புரட்சிக் கோட்டையாகவும், விடுதலை, உண்மை சுதந்திரம், முன்னேற்றம் ஆகியவற்றிற்காகப் போரிடும் எல்லா மக்களினதும் ஆதரவு சக்தியாகவும் அமைந்து விட்டது. ஆகவே தான், மக்கள் சீனத்தின் பாதுகாப்பு புரட்சியின் பாதுகாப்பாகவும் எல்லா மக்களின் நன்மையின் பாதுகாப்பாகவும் அமைந்துள்ளது.

புரட்சிக்காகவும், சோஷலிஸத்திற்கும், கம்யூனிஸத்திற்குமான பெரும் போராட்டத்தில் எமது மக்கள் சீன கம்யூனிஸ்ட் கட்சியுடனும், சீன மக்களுடனும் ஒன்றென இணைந்து முன்னேக்கிச் செல்கிறார்கள். எமது மாபெரும் நட்பும், எமது உடைக்க முடியாத ஒற்றுமையும், உலகம் முழுவதிலும் உள்ள உண்மையான புரட்சிவாதிகளுடனும், கம்யூனிஸ்டுகளுடனும் ஏற்பட்டுள்ள பொது நட்புறவும், ஒற்றுமையும் எமது இரண்டு நாடுகளிலும் வெற்றிகரமான சோஷலிஸ, கம்யூனிஸ நிர்மாணத்திற்கும், உலகத்தின் மற்றப் பகுதிகளிலுள்ள மக்களின் விடுதலைக்கும், புரட்சிக்கும் சேவை செய்பவையாக அமைந்துள்ளன என்றார்.

நாட்டிற்கும், மக்களுக்கும், சோஷலிஸ பொருளாதாரத்திற்கும் புதிய சக்தியை விரைவாக அளிக்கக்கூடிய மாசேதுங் ஹைட்ரோ—மின் சக்தி நிலையத்தின் நிர்மாணிகளுக்கு, அவர்களின் வெற்றிக்கு மீண்டும் ஒருமுறை வாழ்த்துக் கூறி தனது பேச்சை முடித்துக் கொண்டார்.

# ஏகாதிபத்திய வல்லரசுகளின் சதிகள்

# அரபு மக்களின் எழுச்சியை தடுத்து நிறுத்திவிட முடியாது

**பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தின் மத்திய கமிட்டி ஜோர்தானின் தலைநகரான அம்மானிலிருந்து வெளியிடும் அரபு மொழித் தினசரியான "பத்தாஹ்" அமெரிக்க "சமாதானத்திட்ட"த்தை அம்பலப்படுத்தியும் கண்டித்தும் அண்மையில் பல முக்கியமான தலையங்கங்களையும் விமர்சனக் கட்டுரைகளையும் வெளியிட்டிருந்தது. இப் பிரச்சினையின் சர்வதேச அரசியல் முக்கியத்துவம் கருதி "பத்தாஹ்"வில் வெளியான தலையங்கங்களிலும் விமர்சனக் கட்டுரைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டவற்றை இங்கு பிரசுரிக்கின்றோம்.**

**இங்கு "பெரும் வல்லரசுகள்" எனக் குறிப்பிடப்படுபவை அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரிட்டன், பிரான்ஸ் ஆகியனவாகும்.**

**-ஆசிரியர்**

### சோவியத் திரிபுவாதிகளுக்கு சாட்டை

சோவியத் திரிபுவாதிகள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்து, பல நாடுகளின் விடுதலை இயக்கங்களின் கழுத்தைத் திருகிக் கொல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மிக அண்மையில் கூட பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை திருகிக் கொள்வதற்கான சதியில் அவர்கள் இறங்கியுள்ளனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக உலக மக்கள் இன்று என்றுமில்லாத கோபாவேசத்துடனும், உறுதியுடனும் போராடிக் கொண்டிருக்கின்றனர். சோவியத் திரிபுவாதிகளின் கழுத்தறுப்பு வேலைகளுக்கு இதோ ஓர் உதாரணம்.

''பிராவ்தாவுக்கு ஒரு வார்த்தை'' என்ற தலைப்பில் ''பத்தாஹ்'' எழுதியிருந்த தலையங்கத்தை அப்படியே தருகிறோம்.

''சோவியத் பத்திரிகை ''பிராவ்தா'' எத்தகைய விமர்சனங்களையும் பொறுத்துக் கொள்வதில்லை. பாலஸ்தீனப் பிரச்சினை குறித்து அதனுடன் மாறுபட்ட கொள்கையுடைய நாம் எமது கருத்துக்களை விரித்துரைக்கும் பொழுது கூட அதற்கு ஆத்திரம் வருகிறது.

ஆயினும், ரோஜர்ஸ் திட்டத்தை நிராகரிப்பவர்களை, பயன்தராத கண்ணோட்டமுடையவர்கள் என்று குற்றஞ் சாட்டித் தாக்குகிறது பிராவ்தா. இச் சந்தர்ப்பத்திலே பிராவ்தாவுடன் வாதம் நடத்த நாம் விரும்பவில்லை. ஆனால், அப்பத்திரிகைக்கு ஒன்று கூற விரும்புகிறோம்.

பாலஸ்தீனப் போராட்டம் எமது சொந்தப் போராட்டமாகும். அதில் தலையிடுவதற்கு எவருக்குமே உரிமையில்லை. சர்வதேச உணர்வுடன் இதனை ஒருவர் நோக்கினால் அவர் எம்மையே ஆதரிக்க வேண்டி நேரிடும். அல்லது பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்கலாம். ஆனால், கதவை வந்து தட்டினால் பதிலையும் எதிர்பார்க்க வேண்டும்.

இறுதியாக இதைக் கூறுவோம். அமெரிக்க ஏகாதிபத்திய திட்டங்களை நிராகரிப்பது பயன்தராத கண்ணோட்டமாகாது. பிராவ்தாவுக்கு இது தெரிந்திருக்க வேண்டுமே?''

### மீண்டும் சொல்கிறோம்: "அடிபணிய மாட்டோம்"

நாங்கள் இன்றும் சொல்கின்றோம், நாளையும் சொல்வோம், தொடர்ந்தும் சொல்வோம்-சரியான பாதையிலிருந்து விலகிச் செல்ல முயற்சிகள் எடுக்கப்படும்பொழுதெல்லாம் சொல்வோம்-மாட்டோம் என்று. எமது மக்களின் சங்கற்பத்திலிருந்து, எமது இனத்தின் சங்கற்பத்திலிருந்து, நமது கரங்களிலுள்ள துப்பாக்கிகளின் சங்கற்பத்திலிருந்து நாங்கள் சொல்கின்றோம்-மாட்டோம் என்று.

சமாதான தீர்வுகாண வேண்டுவோருக்கு, சமாதானத் தீர்வை நிர்ப்பந்தமாகத் திணிக்கும் அனைவருக்கும் நாங்கள் சொல்கின்றோம் - மாட்டோம் என்று.

நாங்கள் சிறு நாடுகளைச் சேர்ந்த மக்கள்தாம். ஆனால், இந்தப் பெரும் வல்லரசுகளுக்கில்லாத போராட்ட உரத்தைக் கொண்டுள்ள சிறு தொகையினரான நாங்கள்-மாட்டோம் என்று சொல்ல உரங் கொண்டிருக்கும் நாங்கள் ஆயுதங்கள் ஏந்தியுள்ளோம், கிளர்ச்சி செய்துள்ளோம். பாதுகாப்பாளர் முறையை (கார்டியன்ஸ்) நாங்கள் நிராகரித்தோம். இந்தப் பிராந்தியத்திலே பாதுகாவலர் முறையை நிராகரித்தோம்; இன்று நாங்கள் உலக பாதுகாவலர் முறையை நிராகரிக்கின்றோம். இதை நிராகரிப்பதற்கான எமது கோட்பாடு என்றுமே மாறாமல் அப்படியே இருக்கிறது.

உலகைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்ற, நிபந்தனைகளைத் திணிக்கின்ற, தேசப் படங்களை வரைந்து உருவாக்குகின்ற சக்தி என்று தம்மை இப் பெரும் வல்லரசுகள் இன்னும் நினைத்துக் கொண்டிருக்குமேயானால், நாங்கள் அவர்களுக்குச் சொல்வோம்-இல்லை என்று. எமது பூமியின் தேசப் படத்தை நாங்களே, எங்களுடைய சொந்தக் கரங்களினால் வரைந்துகொள்வோம்; ஏனென்றால், எப்படியிருந்தாலும் அது எங்களுடைய பாலஸ்தீனப் பூமியாகும். இப் பூமியின் மக்களாகிய நாங்களே எங்களுடைய தலைவிதியை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும், நிபந்தனைகளுடன் கூடிய ஒரு நிலைமையை-நாங்கள் விரும்பாத ஒரு நிலைமையை-எம்மீது திணிக்க நாங்கள் என்றுமே எவரையுமே அனுமதிக்க மாட்டோம்.

இன்று எம்மைக் கொள்ளையடித்து, ''இஸ்ரேல்'' இருப்பதற்கு சட்ட பூர்வமான அந்தஸ்தை வழங்கவும், எமது உரிமைகளையும், எமது மக்களையும் ஒழித்துக் கட்டவும் இப் பெரும் வல்லரசுகள் இங்கு வந்துள்ளன.

பெரும்பாலான ஒடுக்கப்பட்ட மக்கள்கிளர்ச்சியில், புரட்சியில் கொந்தளித்தெழுந்து தமக்குத்தாமேஎஜமானர்களாகியுள்ளனர். பெரும்பாலான மக்கள் பாலஸ்தீன மக்கள் பக்கம் உறுதியாகவும் கௌரமாகவும் நிற்கின்றனர். போராட்ட உறுதிகொண்டசிறிய நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு விடுதலை பெறும் திறனுண்டு என்பதை எமது பாலஸ்தீன மக்கள் இரத்தத்துடனும், நெருப்புடனும் நிரூபித்துள்ளனர்.

''பத்தாஹ்'' தலையங்கம்
27-7-70

### நாங்களும் பெரு வல்லரசுகளும்

தமக்கிடையே பலதரப்பட்ட முரண்பாடுகளும் வேறுபாடுகளும் காணப்படுகின்றபோதிலும் பெரும் வல்லரசுகள் எனப்படுபவை பாலஸ்தீன அரபு மக்களுடன் தமக்குள்ள ''அடிப்படை முரண்பாடு''களோடு அந்த முரண்பாடுகளையும் வேறுபாடுகளையும் ஒத்திட்டுப் பார்தது அவற்றையெல்லாம் ''இரண்டாந்தர முரண்பாடு''களாகக் கணிப்பிடுவதெனத் தீர்மானித்துள்ளன.

ஐ. நா. பந்தோபஸ்து சபையோ, அன்றேல் நான்கு பெரும் வல்லரசுகளோ பாலஸ்தீன் மக்கள் சம்பந்தப்பட்டப் பிரச்சினைகளைத் தவிர வேறு எதிலுமே ஏகமனதான தீர்மானங்களுக்கு வரவில்லை என்பது ஆச்சரியத்திற்குரியதாகும். ஏன் அப்படி? எமது நாட்டின் விடுதலை இலட்சியம் அவை யாவற்றுக்குமே அபாயகரமானதாக இருப்பதனாலா, அல்லது அவை யாவுமே பாலஸ்தீன விடுதலை இலட்சியத்தை ஒழித்துக் கட்டுவதில் அக்கறை கொண்டிருப்பதனாலா?

தமது தார்மீக, தொழில் நுட்ப பலத்தைக் காண்பித்து சிறிய நாடுகளைச் சேர்ந்த மக்களை மிரட்ட இப் பெரும் வல்லரசுகள் தமக்குள்ளே கனவான் ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்து வரும் அதே வேளையில், இந்தப் பிராந்தியம் யாருக்குச் சேரவேண்டும், அல்லது அந்தப் பிராந்தியம் யாருக்குச்சேரவேண்டும் என்ற விஷயத்தில் மட்டுமே கருந்து வேறுபாடு கொண்டு, தம் மிச்சைப்படி செல்வாக்குப் பிராந்தியங்களைத் திரும்பப் பகிர்ந்து கொள்வதில் இப் பெரும் வல்லரசுகள் உலகமெங்கணும் நம்பிக்கைப் பொறுப்பாளர் (டிரஸ்டி) பாத்திரத்தை வகிக்க விரும்புவதனாலிருக்கக் கூடும்.

எத்தகைய உருவத்திலுமான, எத்தவித அந்நிய செல்வாக்கிலிருந்தும் பூரண விடுதலை பெற நடத்தும் போராட்டம் இப் பெரும் வல்லரசுகளுக்குக் கோபத்தையூட்டியுள்ளதுடன், அவற்றுக்கு முன்னர் நாங்கள் எங்களது சிரங்களைத் தாழ்த்தி அடிபணியச் செய்யும் நோக்கத்துடனும் உயரிய தேசிய நலன்களை எமது மக்கள் அவற்றுக்கு விட்டுக் கொடுக்கச் செய்யும் நோக்கத்துடனும், எமது மக்களையும், எமது நாடுகளில் நிலவும் பொதுஜன அபிப்பிராயத்தையும் உருட்டி மிரட்டும் பொருட்டு தமது புஜபலத்தைக் காண்பித்து எம்மைப் பயமுறுத்தவும் செய்துள்ளது.

ஆனால், எமது யுகம் உலக ஏகாதிபத்தியத் தலைமை ஆதிக்கம் அழித்தொழிக்கப்படும் யுகமாகும்; மக்கள் விடுதலையினதும் மக்களது சுய நிர்ணய உரிமையினதும் யுகமாகும். எமது சொந்த தலைவிதிகளில் தலையிடவோ, அல்லது எம்மை மிரட்டவோ, அல்லது எம்மை அச்சுறுத்தி ஆளுவதற்கே நாம் இப் பெரும் வல்லரசுகளுக்கு அனுமதியளிக்க — இடம் வழங்கவே கூடாது.

கடைசியாக ஒரு வார்த்தை: பெரும் வல்லரசுகள் எமக்குச் சுய - நிர்ணயம் அளிக்க மறுக்குமேயானால் எமக்கும் அவற்றுக்குமிடையே பேசிக்கொள்ள ஒரேயொரு பாஷைதான் மிஞ்சியிருக்கும்-ஆமாம், துப்பாக்கி ரவைகளும் குண்டுகளும் பேசும் பாஷை. சிறிய நாடுகளைச் சேர்ந்த மக்களாகிய நாம் துப்பாக்கி ரவைகளைக் கொண்டும் குண்டுகளைக் கொண்டும் பெரும் வல்லரசுகளின் கொடுங்கோன்மையையும் அகங்காரத்தையும் மண்ணுக்கிறையாக்குவோம்.

''பத்தாஹ்'' விமர்சனக் கட்டுரை, 29. 7. 70.

## உலக வலம்
உஸ்மான்

# மத்தியக் கிழக்கில் சோவியத் திரிபுவாதிகளின் துரோகச் செயல்

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து ஆளையே கடிப்பது போல இருக்கிறது மத்திய கிழக்கில் திரிபுவாத சோவியத் யூனியனின் சூழ்ச்சி. அமெரிக்க ராஜாங்க அமைச்சின் ரோஜர்ஸ் வகுத்த ''திட்டம்'' இப்பொழுது நடைமுறைப்படுத்தப் பட்டிருப்பது யாவரும் அறிந்ததே. இத் ''திட்டத்தின்'' அடிப்படையிலே இப்போது தொண்ணூறு நாள் யுத்த நிறுத்த உடன்பாடும் சமாதான பேச்சு வார்த்தைகளும் ஆரம்பமாகியுள்ளன.

வெளிப் பேச்சுக்கு ஐ. நா. வின் ஆதரவில் (அமெரிக்க தாஸன் ஊதாண்ட் வாழ்த்துடன்) இம் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்ட போதும், உண்மையில் இச் சமாதான சூழ்ச்சியை அமெரிக்க ஏகாதிபத்தியமும் ரஷ்ய சமூக ஏகாதிபத்தியமுமே தமக்குள் தீட்டின என்பதும் விஷயமறிந்தவர்களுக்குப் புதினமல்ல.

ஐ. நா. பார்வையாளர்களே இப்பொழுது எகிப்து — இஸ்ரேல் யுத்த நிறுத்தப் பிரதேசத்தில்சமாதானத்தைப்பேணுபவர்களாய்க் கடமையாற்றுகின்றனர். எனினும், இந்த ஏகாதிபத்திய சூழ்ச்சித் திட்டத்தை — பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தைக் காட்டிக் கொடுக்கும் சூழ்ச்சித் திட்டத்தை பாலஸ்தீன மக்களும் பரந்துபட்ட அரபு மக்களும், நிராகரித்திருப்பதால் அவ்வப்போது கைகலப்புகளும், கொரில்லாப் போர்ச் சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமல்லாது, எகிப்தை சோவியத் தலைவர்கள் கட்டிப் போட்டிருக்கும் அளவுக்கு, இஸ்ரேலை அமெரிக்க எஜமானர்கள் அடக்குவதாயில்லை. இக் காரணங்களினால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இரு வல்லரசுகளும் விரும்பும் வேகத்திலே நடைபெறவில்லை.

இந் நிலையில் எப்படியாவது மத்தியகிழக்கில் புரட்சிகரச் சூழ்நிலையை மாற்றி, ''சமாதானம்'' (அதாவது அநீதி) நிலவினால் போதும் என்று அங்கலாய்க்கிற ரஷ்யர்கள் புதியதொரு ''திட்டம்'' தீட்டியிருக்கின்றனர். அதாவது, ஐ. நா. பார்வையாளர்களுக்கு மேலாக, அமெரிக்க — ரஷ்ய படைகள் அப்பிராந்தியத்தில் நிலை கொண்டு, ''சமாதானத்தை'' பேணுவதாகும். மொஸ்கோவில் மெதுவாகத் தெரிவிக்கப் பெற்ற இந்த யோசனையைநிக்ஸனின்ஆலோசகர்கள் ஏற்றிருப்பதாகத் தெரிகிறது.

இது ஆழ்ந்து கவனிக்க வேண்டிய விஷயம். ஆயுத தளபாடங்களைக் கொடுத்து ஏற்கனவே ரஷ்யா எகிப்தைக் கட்டுப்படுத்தியிருக்கிறது. இனி ரஷ்ய ஆயுதப் படையும் அங்கு நிலைகொண்டால் பேசத் தேவையில்லை. சமாதானத்தின் பேரில் காலனியாதிக்கமே ஏற்படும். இதுவரை பல நாடுகளில் (இந்தியா, இந்தோனேஷியா, லத்தின் அமெரிக்கா நைஜீரியா) ரஷ்ய ஆயுதங்கள் தேசபக்தர்களுக்கும் விடுதலை வீரருக்கும் எதிராக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. மத்திய கிழக்கில் ரஷ்ய ஆயுதப் படைகள் நிலைகொண்டால், அவை பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தினரைத் தடுத்து நிறுத்துவதற்காகவே பயன்படும். அமெரிக்காவும், ரஷ்யாவும் மத்திய கிழக்கை நடைமுறையில் கூறுபோட்டதாய் அமையும்.

இதை முன்கூட்டியே நன்குணர்ந்துதான் சீன கம்யூனிஸ்டுத் தோழர்களும், பிற மார்க்சிஸ்டு - லெனினிஸ்டுகளும், தொடக்கத்திலிருந்தே, பெருமளவிலான ரஷ்ய இராணுவ உதவியைக் கண்டித்து வந்துள்ளார்கள். மக்கள் யுத்தமே தற்சார்பும், சுதந்திரமும் இயங்க வழிவகுக்கும். இந்தோ - சீன மக்கள் இவ் வுண்மையை இப்பொழுது நாளுக்கு நாள் தெரிந்து வருகின்றனர். அரபு மக்கள் விரைவில் உணர்ந்துவிடுவர். பாலஸ்தீன் விடுதலை இயக்கத்தினர் இதனை ஐயத்துக்கு இடமின்றி அறிந்து விட்டனர்.

★

## ★ இறக்குமதியாகும் சஞ்சிகைகளை தடை செய்ய வேண்டும் என்பவர்களின் இரட்டைப் பேச்சு

தென் இந்தியாவிலிருந்து வரும், சஞ்சிகைகளைத் தடை செய்ய வேண்டுமென்று சில திரிபுவாதிகளும். திசை தவறிய பிறரும் கடந்த சில வாரங்களாக முதலாளித்துவப் பத்திரிகைகளில் ''இயக்கம்'' நடத்தினார்கள். இவ் வேளையில் ஆஸ்திரேலிய நாட்டில் இத்தகையதொரு ''இயக்கம்'' நடைபெறுகிறது. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் முதலிய தேசங்களிலிருந்து அங்கு இறக்குமதியாகும் சில ஆபாசப் படங்கள், பத்திரிகைகள் முதலியவற்றை ''தணிக்கை'' அல்லது ''தடை'' செய்ய வேண்டும் என்ற குரல் எழுந்தது. இது குறித்து ஆஸ்திரேலியா கம்யூனிஸ்ட் கட்சியின் வார ஏடான வான்கார்ட் என்ற பத்திரிகையில் வாசகர் ஒருவர் சமீபத்தில் எழுதியிருப்பது, பெருளவு பொருத்தமாகக் காணப்படுகிறது. அவர் எழுது எழுதுகிறார்.

இப்பொழுது ''தடை'' செய்ய வேண்டும் என்று கூக்குரலிடுபவர்கள், எமது சமுதாய ஒழுக்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று முதலைக் கண்ணீர் வடிப்பவர்கள் தம்மைச் சுற்று முற்றும் பார்த்தால், எத்தனையோ புத்தகக் கடைகளில், கேடுகெட்ட, ஆபாசமான இலக்கியங்களும் நூல்களும் தாராளமாக விற்கப்படுவதைக் காண்பார்கள். இப்பொழுது ''தடை'' செய்யப்பட வேண்டும் என்று கோரப்படுவனவற்றைவிட எந்தவிதத்திலும் ''சுத்தம்'' கூடுதலாக இல்லாத படங்கள் நேற்றும் காட்டப்பட்டன; இன்றும் காட்டப்படுகின்றன.

இத்தகைய இரட்டைப் பேச்சு எமது தேசத்தில் பல சந்தர்ப்பங்களிலும் கேட்கக் கூடியன. பொதுவாகத் தகுந்த அடிப்படையிலே தடைவிதிப்பதற்குப் பதிலாக, குறிப்பிட்ட ஒன்றை அல்லது இன்னொன்றைத் தடை செய்வது நியாயமா என்ற வீண்வாதத்தில் மக்களது கவனம் திசை திருப்பப்பட்டு வருகிறது. பத்திரிகைகளுக்கும், திரைப்படங்களுக்கும் ஒருசேர இது பொருந்தும்.

ஒரு படத் தயாரிப்பாளரோ அல்லது ஆசிரியரோ எவ்வளவு தான் ''முற்போக்கு'' வாதியாக இருப்பினும், அவர்கள் தயாரிக்கும் பொருளின் உள்ளடக்கம் பணம் முதலீடு செய்பவர்களைப் பொறுத்ததாகவே இருக்கும். அவர்கள் நாடுவதெல்லாம் மக்கள் மனதில் முற்போக்குதத்துவத்தை விதைப்பதல்ல; இலாபம் ஈட்டுவதேயாகும்.

இன்று ஆஸ்திரேலியாவில் ''தணிக்கை'' தவிர்க்க முடியாதது. அதேவேளையில் சில வற்றை''இலக்கியம்'' ''கலை'' என்று வானளாவப் போற்றுவதும் பெருந் தவறாகும். உண்மையில் இன்று எமக்குத் தேவையானவை மனுக்குலம் வாழ மக்களைச் சேவைசெய்யத் தூண்டும் கலைப்படைப்புக்கள். ஆஸ்திரேலியாவில் படைப்பாற்றல் நிறைய வாய்க்கப்பெற்ற கலைஞர்களும் தொழில் நுட்பவாதிகளும் பலர் உள்ளனர். அவர்கள் எல்லாம் ஏகாதிபத்தியச் சுரண்டல் முதலியன இன்றி தமது திறமைகளைப் பயன்படுத்தும் காலம் விரைவில் வரும்.

★

## ★ ''அல்பதாஹ்'' பிரதிநிதிகள் தோழர் சூ என்-லாயை சந்தித்தனர்

சென்ற வாரம் இப்பகுதியிலே, ''மக்கள் சீனத்துக்கு நண்பர்கள் யார் விரோதிகள் யார்'' என்பது பற்றி எழுதியிருந்தோம், சமீபத்திலே பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மத்திய குழுத் தலைவர் யஸீர் அரபாத்தின் விசேஷ தூதுவராக, ஹௌஸ்னி யூனுஸ் என்பவர் பீக்கிங் சென்றிருந்தார். அங்கு சீனப் பிரதமர் சூ என்-லாயுடன் நட்புறவு ரீதியில் பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளார். காந்தம் தான் இரும்பை ஈர்க்கும் !

★

## ★ பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் வர்க்கத் தன்மை

சமீபத்தில் நடந்த பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி வெற்றி பெற்றது தெரிந்ததே. அங்குள்ள பாராளுமன்றத்தில் மொத்தம் 630 அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 330 பேர் கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

பொதுவாக, பாராளுமன்ற ஜனநாயகம் என்றவுடன், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தை மேற்கோள் காட்டாத முதலாளித்துவ, பிற்போக்கு அரசியல் வாதிகளும் அறிஞர்களும் இல்லை எனலாம். பிரிட்டனைப் போல் ''சமாதானமாக'' அபிவிருத்திப் பாதையில் செல்லவேண்டுமென ''ஆலோசனைகளும் அறிவுரைகளும்'' கூறுபவர்கள் ஏராளம். பிரிட்டனுக்கு கல்வி பயிலச் சென்ற இலங்கையின் மாஜி ''இடதுசாரி'' தலைவர்களும் கூட இன்று கண்ணியமான பாராளுமன்றவாதிகள்'' என்ற ''கௌரவத்''தைப் பெற்றதில் பூரித்துப் போயிருக்கிறார்கள். மகாராணிக்கு விசுவாசமாய் இருப்போம் என்று சத்தியப்பிரமாணம் செய்தபோதெல்லாம் நமது பாராளுமன்ற அங்கத்தவர்கள் வெட்கப்படவில்லை. சிலர் உண்மையிலேயே பெருமைப்பட்டனர்.

இப்படிப்பட்ட பாராளுமன்றத்தின் தாயகம் என கூறப்படும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் லட்சணத்தை— அதன் அங்கத்தவர்களுடைய தொழில், அல்லது வர்த்தகத்தைக் கவனிப்போம். நமக்குக் கிடைத்திருக்கும் இத் தகவல்களை பிரிட்டிஷ் பிற்போக்கு கும்பலின் பத்திரிகை ஒன்று வெளியிட்டது. பி. பி. சி. வானொலியும் தனது செய்தியொன்றில் இத் தகவல்களின் சாரத்தைப் பெருமிதமாக ஒலி பரப்பியது.

தற்போதைய அங்கத்தவர்களில் இருநூற்றிப் பதினெட்டு (218) பேர் பிரபலமான வர்த்தக, தொழில் துறையினர். அதாவது பெரும் முதலாளிகள். இந்த 218 பேர்களில் 29 பேர்களைத் தவிர, அனைவரும் ஆளும் கட்சியான கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர்கள். பின்வரும் எண்ணிக்கையில் இப் பெரும் வர்த்தக, தொழில் முதலாளிகள் எம். பி.க்களாயிருக்கிறார்கள்.

| | |
|---|---|
| பிரபலமான லொயிட்ஸ் இன்சூரன்ஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அதாவது எம். பி.க்கள் | 46 |
| முதலீடு, டிரஸ்டிகளில் உள்ளவர்கள் | 23 |
| சொத்துப் பரிபாலகர்கள் | 21 |
| வர்த்தக ஆலோசகர்கள் | 19 |
| வங்கியாளர்கள் | 18 |
| நிர்மாணத் துறையினர் | 18 |
| ஜவுளி வர்த்தகர்கள் | 14 |
| கணக்காளர்கள் | 9 |
| சரக்குத் தரகர்கள் | 8 |
| மருந்து வர்த்தகர்கள் | 6 |
| மது வர்த்தகர்கள் | 4 |
| ஏனையோர் | 32 |

தற்போதைய பாராளுமன்றத்தில் உள்ளவர்களில் நூற்றி ஐம்பது (150) பேர் புதியவர்கள். இவர்களில் 55 பேர் வர்த்தக, தொழில் முதலாளிகள். அதாவது புதிய அங்கத்தவர்களில் இத் தொகையினர் மூன்றில் ஒரு பகுதியினராகும். அதேபோல பாராளுமன்றத்தை முழுமையாக எடுத்தாலும் மூன்றில் ஒரு பகுதியினர் வர்த்தக, தொழில் முதலாளிகள்.

புதிய அங்கத்தவர்கள் மூலமாகவும் லண்டன் ''சிறப்பாக'' பிரதிநிதித்துவம் செய்கிறது. புதிய அங்கத்தவர்களில் 15 பேர் லண்டன் நகரத்தின் பிரபல்யம் வாய்ந்த வர்த்தக நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள். இவர்களில் நால்வர் சரக்குத்தரகர்கள். ஐந்துபேர் இன்சூரன்ஸைச் சேர்ந்தவர்கள். இருவர் முதலீட்டு முகாமையாளர் பகுதியைச் சேர்ந்தவர்கள். மூவர் வங்கித் தொழிலைச் சேர்ந்தவர்கள். அடுத்த புள்ளி ரொபி ஜெஸல் என்ற பிரபலமான பணமுதலையாகும்.

பரவலான பொருளாதாரப் பார்வையில் பாராளுமன்றத்

7-ம் பக்கம் பார்க்க

# போராடும் செங்கொடி சங்கச் செய்திகள்

## நெலுவ, கனவரல்லையில் கூட்டங்கள் நடைபெற்றன

மக்கள் அரசாங்கம் வந்து விட்டது; சோஷலிஷம் வந்து விட்டதென சமசமாஜ கட்சினரும், திரிபுவாதிகளும் அசீஸும் கூப்பாடு போடுகின்றனர். ஆனால் கடந்த மூன்று மாத காலங்களில் இது மக்களுக்கு ஆதரவான அரசாங்கமில்லை; மக்களுக்கு விரோதமான அரசாங்கம் என்பது சாதாரண மக்களுக்கு அரசாங்கத்தின் பல்வேறு தொழிலாளர் விரோத நடவடிக்கைகளினால் அம்பலமாகியுள்ளது. இந்த அரசாங்கம் சாதாரண தொழிற்சங்கப் பிரச்சினையைக் கூட தீர்த்து வைக்கத் தயாரில்லை.

கடந்த மூன்றுமாதமாக கீனுகலை தோட்டமக்கள் வீரமிக்கப் பேரராட்டத்தை நடத்துகின்றனர்; வெள்ளைக்கார ஏஜண்ட் சமர்வில்லை எதிர்த்துப் போராடுகின்றனர். அரசாங்கம் தொழிலாளர் போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்காதது மட்டுமல்ல; போராட்டத்தை முறியடிக்க துரைக்கு உதவி செய்கின்றது. பொலிசார் போராடும் தொழிலாளரை எதிர்த்துத் தாக்குதல் நடத்துகின்றனர்.

இதிலிருந்து தொழிலாளர்கள் சரியான பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். புரட்சிகரசெங்கொடிச் சங்கத்தைத் தவிர மலைநாட்டில் வேறெந்த இயக்கமும் தொழிலாளரைப் புரட்சிகரப் போராட்டத்தில் ஈடுபடுத்தாது.

தொழிலாளர் தொழிற்சங்க போராட்டங்கள் மூலமாக சிறு, சிறு பிரச்சினைகளுக்குத் தான் தீர்வுகாண முடியும். அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமானால் அரசியல் அதிகாரம் மக்கள் கைக்கு வரவேண்டும். அரசியல் அதிகாரத்தைப் பெற தலைவர் மாசேதுங் காட்டும் புரட்சிகர வழியைக் கடைபிடித்து போராட்டம் நடத்த வேண்டும்.

மேற்கண்டவாறு செங்கொடிச் சங்கத்தின் துணைத் தலைவர். தோழர். ரொசாரியோ பெர்ணண்டோ நமுனுகலை கனவரல்லை சி. வி. டிவிசனிலும், பண்டாரவளை நெலுவ தோட்டக் கூட்டத்திலும் சொற்பொழிவாற்றிய போது குறிப்பிட்டார். கூட்டங்களுக்கு முன் பிரமாண்டமான ஊர்வலங்கள் நடைபெற்றன. தோழர். எல்லப்பன் உட்பட பலர் சொற்பொழிவாற்றினர்.

## கீனுகலை தொழிலாளர்களுக்கு பொகவானை குருப் தொழிலாளர்கள் உதவி

கீனுகலை தொழிலாளர்களின் வீரமிக்க போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு உதவும் முகமாக பொகவந்தலாவைப் பகுதியிலுள்ள பொகவானை குருப் தொழிலாளர்கள் ஒரு குடும்பத்திற்கு ஒரு கண்டு அரிசி வீதம் கொடுத்து உதவியவர்களுக்கு பொகவானை குருப் செங்கொடி சங்கத்தின் முன்னணித் தோழர்களும், தலைவர் எஸ். எம். பெருமாளும் தமது, நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

போராடும் கீனுகலை தொழிலாளர்களுக்கு உதவுவதற்காக பொகவந்தலாவைப் பகுதித் தொழிலாளர்கள் அரிசி, பொருள் உதவி செய்வதாக அறிகிறோம்.

## கல்மதுரை தோட்டத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும்

அக்கரபத்தனை கல்மதுரை தோட்டத்தில் செங்கொடி சங்கத்தின் பொதுக் கூட்டம் 15 - 9 - 70ல் நடைபெறும். பொதுக் கூட்டத்துக்கு முன் ஊர்வலம் நடைபெறும்.

இக் கூட்டத்தில் செங்கொடி சங்கத்தின் தலைவர் தோழர் என். சண்முகதாசன், உப-தலைவர் ரொசாரியோ பெர்ணண்டோ, கல்மதுரை தோட்டத் தலைவர் தோழர் ஆர். என். மாரிமுத்து, செங்கொடி சங்கத்தின் செயலாளர் தோழர் ஹிக்கொட தர்மசேன, சி. டி. யு. எப். தலைவர் தோழர் வொட்சன் பெர்ணந்து மற்றும் தோழர்களும் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

## அகர ஓயா தொழிலாளர்கள் போராட்டத்தின் மூலம் வெற்றி பெற்றனர்

அட்டன் ரோசாலைப் பகுதியிலேயுள்ள அகர ஓயா தோட்டத் தொழிலாளருக்கு நிர்வாகம் ஒழுங்காக சம்பளம் கொடுக்கவில்லை. செங்கொடிச் சங்கத்தின் மூலமாக' லேபர் கண்ரோலருக்கு இப் பிரச்சினை கொடுக்கப்பட்டது. கண்ரோலர் கொன்பரன்ஸ் நடத்தினார்; விசாரணைகள் செய்தார். ஆனால் சட்டம் தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை.

செங்கொடிச் சங்கத்தின் போராட்டப் பாதையில் சென்றனர் தொழிலாளர். தோட்டத்திலிருந்து தேயிலை ஏற்றுமதி செய்வதை தடை செய்தனர். நிர்வாகம் பணிந்தது. பாக்கிச் சம்பளம் கிடைத்தது.

அரசாங்கத்தின் சட்டத்தை நம்பாமல், தொழிலாளர் தங்கள் சக்தியில் நம்பிக்கை வைத்து புரட்சிகர போராட்டங்களைச் செய்ய வேண்டும் என்பதற்கு இச் சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு.

◎ 6-ம் பக்கத் தொடர்

தை எடுத்துக் கொண்டால், மிகவும் குறிப்பிடக்கூடிய விஷயம் என்னவெனில், அரசியலில் ஏற்படும் சிறிய மாற்றத்தையும் உற்றுக் கவனித்து வரும் தொழில் நிறுவனங்களுடன் பெரும்பாலான அங்கத்தவர்கள் தொடர்புடையவர்கள் என்பதாகும்.

நிர்மாணத் தொழிலை பிரதிநிதித்துவப்படுத்த 18 எம். பி.க்கள் உள்ளனர். அல்பேர்ட் கொண்டையின், என்ற பெயருள்ள நிர்மாணக் குழுவைச் சேர்ந்த அல்பேர்ட் கொண்டையின், தொழில் நுட்ப இலாகாவுக்கான அமைச்சருக்குப் பாராளுமன்றக் காரியதரிசி.

ஜவுளிவர்த்தக நலன்களைக் கவனித்துக் கொள்ளவும் 14 அங்கத்தவர்கள் இருக்கிறார்கள் பிரபலமான ஜோர்ஜ் பிரவுன் தேர்தலில் தோல்வியடைந்த போதிலும், மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள - பல உப கம்பெனிகள் உள்ள கோட் ஒல்ட்ஸ் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப் படுத்த இரண்டு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். முதல் முறையாக பாராளுமன்றம் செல்லும் ஆர். ஏ. பட்லரின் மகனான அடாம் பட்லர் கோட் ஒல்ட்ஸ் நிறுவனத்தின் பல கம்பெனிகளில் டைரக்டராக இருக்கிறார். இரண்டாமவர்

## உலக வலம்

20 வருடமாகப் பாராளுமன்றத்தில் உள்ள பிரடெரிக் பேடன். இவர் மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் உப கம்பெனியான பிராட்பரி கிறே டொரெக்கிக்குத் தலைவர்.

மதுபானத் தொழில் செய்யும் நிறுவனங்களின் நலன்களைக் கவனிப்பதற்கு நான்கு பேர்கள் உள்ளனர். இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்ச்சியாக கன்சர்வேடிவ் கட்சியையே முற்று முழுதாக ஆதரித்து வந்துள்ளனர். சென்ற வருடம் ஆறு பேர் சேர்ந்து அறுபதினாயிரம் பவுண்களை (சுமார் ஒன்பது லட்சம் ரூபாய்) கட்சிக்குக் கொடுத்துதவினர். இந்த விபரங்களிலிருந்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் வர்க்கத் தன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

★

## அமெரிக்க உளவு இலாகா எதிர்ப்புரட்சியாளருக்கு நிதி உதவுகிறது

மாணவர், வாலிபர், தொழிலாளர் இயக்கங்களில் ஈடுபட்டுள்ள மூன்று இந்திய ஸ்தாபனங்களுக்கு, அமெரிக்க உளவு இலாகா நிதி அளித்துள்ளதாக நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த இந்திய ஸ்தாபனங்கள் பெயர்கள் வருமாறு:

சர்வதேச இளைஞர் ஸ்தாபனம், புதுடில்லி; இந்திய தேசிய மாணவர் பத்திரிகை கவுன்சில்; இந்திய நண்பர்கள் கமிட்டி டிரஸ்ட்.

நிதியளிப்பதற்கு அமெரிக்க உளவு இலாகா அமைத்துள்ள நியூயோர்க்கிலுள்ள இளைஞர், மாணவர் விவகாரங்களுக்கான நிறுவனத்தின் மூலமாக முதலிரண்டு இந்திய ஸ்தாபனங்களும், காதர்வுட் நிறுவனத்தின் மூலம் மூன்றாவது ஸ்தாபனமும் தொகை வாங்கியதாக அப் பத்திரிகை அறிவிக்கிறது.

அமெரிக்க உளவு இலாகா உட்பட ஏனைய அமெரிக்க ஏகாதிபத்திய ஸ்தாபனங்களும் மேற்கூறிய ஸ்தாபனங்களுக்கு மட்டுமல்லாமல், இன்னும் பல இந்திய ஸ்தாபனங்களுக்கும் இந்திய அரசியல் கட்சிகளுக்கும் நிதி உதவி யளித்து வருகின்றன. இந்தியாவில் எதிர்புரட்சிவேலைகளுக்கு இந்த ஸ்தாபனங்களையும், கட்சிகளையும் பயன்படுத்தும் நோக்கத்துக்காகவே இந் நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன.

## கொனகொல்லை தோட்டத்தில் வேலைநிறுத்தம் வெற்றி

டிக்கோயா கொனகொலை தோட்டத்தைச் சேர்ந்த செங்கொடிச் சங்க அங்கத்தவர்களும், இ. தொ. க. அங்கத்தவர்களும் 4 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

தோட்டக் கோயில் மணி காணாமற்போனதைத் தொடர் மீது நடைபெற்ற தகராறுகளில் பொலிசார் செங்கொடிச் சங்க உறுப்பினர்களுக்கு தொல்லை கொடுத்ததைத் தொடர்ந்தே போர்ராட்டம் நடைபெற்றது, செங்கொடிச் சங்கத்தைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டனர்.

வேலைநிறுத்தம் சம்பந்தமான விசாரணையில் தோட்டத்துரை காணாமற் போன மணிக்குப் பதிலாக புதிய மணி போடுவதாக ஒப்புக் கொண்டதினால் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

## பசுமலை வேலைநிறுத்தம் தொடர்கிறது

கடந்த ஜூன் மாதத்திலிருந்து நடைபெறும் அக்கரபத்தனை பசுமலை தோட்டத் தொழிலாளரின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்கின்றது. போராடும் தொழிலாளர் செங்கொடிச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்.

## கொட்டியாகொல்லை தோட்டத் தொழிலாளர்கள் செங்கொடி சங்கத்தில் இணைந்தனர்

கொட்டியாக் கொல்லை தோட்டத் தொழிலாளர் செங்கொடிச் சங்கத்தில் சேர்ந்துள்ளனர். பிற்போக்கு சங்கங்களை விட்டு விலகி தொழிலாளர் செங்கொடிச் சங்கத்தில் சேர்ந்தவுடன் தோட்ட நிர்வாகத்திற்கும் தொழிலாளருக்குமிடையில் தகராறுகள் ஏற்பட்டன, தொழிலாளர் மேல் துரைமார் பொலிசில் புகார் செய்தனர். தொழிலாளர் ஒருவர் சின்னத்துரையின் முகத்தில் துப்பிவிட்டதாக ஒரு புகார்.

கொட்டியாக் கொல்லை தோட்டத் தொழிலாளர் நிர்வாகத்திற்கு எதிரான போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி, கோரிக்கைகளைப் பெற தயாரிப்பு செய்கின்றனர்.

## தெனியாவில் செங்கொடி சங்கத்தின் காரியாலயம்

இலங்கை தோட்டத் தொழிலாளர்களுக்கு புரட்சிகரத் தலைமைதரும் இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கத்தின் காரியாலயம், ஒன்று தெனியாயவில், பல்லேகம வீதியில் திறக்கப்பட்டுள்ளது.

தெனியாய பிரதேசத்தில் தோட்டத் தொழிலாளர்களை அணிதிரட்டி வரும் செங்கொடி சங்கத்துக்கு ஒரு காரியாலயம் இல்லாத குறை இதனால் தீர்க்கப்படுகிறது.

தோட்டத் தொழிலர்ளர்களின் முக்கிய பிரச்சினைகளுக்காகப் போராடாமல் காட்டிக் கொடுக்கும் சந்தர்ப்பவாத தொழிற்சங்கங்களிலிருந்து தொழிலாளர்கள் செங்கொடி சங்கத்தில் இப்போது அணிதிரண்டுவருவது இப்பிரதேசத்திலுள்ள தோட்ட முதலாளிகளுக்கு பெரும் பீதியை அளித்து வருகிறது.

வாசியுங்கள்
தொழிலாளி
விலை சதம் 10
விபரங்களுக்கு:-
121. யூனியன் பிளேஸ்
கொழும்பு 2

# பொலிஸ்படையின் கொலைவெறியை கடுமையாகக் கண்டிக்கின்றோம்

## தோழர் சண் பிரதமருக்கு கடிதம்

தற்போது கீனகலை தோட்டத்தில் நடைபெற்றுவரும் வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியுள்ள தொழிலாளர்கள் மீது பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது, இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்க தலைமையில் போராடிய தோழர் பி. ராமையா குண்டடிப்பட்டு காலமானார். இது சம்பந்தமாகவே இக் கடிதத்தை நான் உங்களுக்கு எழுதுகின்றேன்.

கீனகலை தோட்டத்தில் உறுதியுடன் நடைபெறும் வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் நோக்கத்துடன் உங்களது பொலிஸ் படை எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தினதும், தொழிற் சங்க சம்மேளனத்தினதும் கடுமையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இரு மாதங்களுக்கு மேலாக இத் தோட்டத்தில் நடைபெற்றுவரும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டுள்ள சிங்கள - தமிழ் தொழிலாளர்களுக்கு உத்தியோகஸ்தர்களுக்கு எதிராகவும், அந்நிய ஏகாதிபத்திய தோட்ட முதலாளிக்கு சார்பாக உங்களது பொலிஸ் படை நடந்து கொண்டது என்பதை இச் சம்பவம் பூரணமாகத் தெளிவு படுத்தியுள்ளது.

பாராளுமன்றத்துக் குள்ளே இரு பகுதியினருக்கிடையில் சங்கீத நாற்காலி விளையாட்டு நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் உண்மையான அரசியல் அதிகாரம் பொலிஸ் படையையும், இராணுவத்தையும் பிர்தான அங்கமாகக் கொண்ட அரசு இயந்திரத்தின் கையிலேயே அரசியல் அதிகாரம் இருக்கின்றது என்ற எமது கொள்கையை பொலிஸின் மிருகத்தனமான நடவடிக்கை துலாம்பரப்படுத்தியுள்ளது. அரசு இயந்திரம் எப்பொழுதும் முதலாளித்துவ சமுதாயத்தைப் பாதுகாக்கின்றது. அது சுரண்டலின் காவல் நாயாக செயல்படுகிறது. நடந்த மேமாதம் 27ந் திகதிக்குப் பின்னர் நடைபெற்ற எவையும் இந்த நிலைமையை மாற்றவில்லை. என். எம். பெரேரா, பீட்டர் கெனமன் போன்ற முன்னாள் இடதுசாரி தலைவர்கள் அல்லது தோட்டத் தொழிலாளர்களின் தலைவர்களெனக் கூறிக் கொள்ளும் அசீஸ் போன்றவர்கள் மந்திரி சபையிலோ அல்லது அரசாங்கத்திலோ இருந்தபோதிலும் இந்த அரசு இயந்திரத்தின் தொழிலாளர் வர்க்க விரோதத் தன்மையையும் அடக்குமுறைத் தன்மையையும் கடுகளவாவது மாற்றிவிடவில்லை.

மூன்று மாதங்களுக்கு முன்னர் உங்களது அரசாங்கம் பதவி ஏற்ற பின்னர் நடைபெற்ற பொலிஸின் துப்பாக்கி பிரயோக கொலைச் சம்பவம் இதுதான் முதல் தடவையானது அல்ல. உங்களது பொலிஸ் படை இந்நாட்டு தொழிலாளி வர்க்கத்துக்கு மேலும் ஒருமுறை இரத்தக் கடன் அளிக்கும் நிலைமைக்கு உள்ளாகியுள்ளது. இரத்தக் கடன் இரத்தத்தின் மூலமே தீர்க்கப்படும்.

உயிர்தியாகம் செய்த தோழர் பி. ராமையாவுக்கு தமது அஞ்சலியை செலுத்துகின்றோம். அவரின் மரண பழியைத் தீர்ப்பதற்கு தயாராகுமாறு இந் நாட்டு தொழிலாளர் வர்க்கத்துக்கு நாம் அறைகூவல் விடுக்கிறோம்.

இந்த துப்பாக்கிப் பிரயோக கொலைச் சம்பந்தமாக எதுவித விசாரணையையும் நாம் கோரவில்லை. ஏனெனில், அந்த விசாரணையில் கிடைக்கும் தீர்ப்பை நாம் அறிவோம். எனவே, எமது கண்டனத்தை தெரிவிப்பதற்காகவே இக் கடிதத்தை உங்களுக்கு எழுதினேன்.

குறிப்பு:

இக் கடிதம், பிரதமருக்கு அனுப்பப்பட்டபின் பொலிஸின் இத் துப்பாக்கிப் பிரயோகத்தினால் படுகாயமடைந்த தோழர் அழகர்சாமி காலமாகிவிட்டார்.

## இவருக்கு என்ன பெயர் வைக்கலாம்?

லேக் ஹவுஸ் பத்திரிகைகளை அரசாங்கம் கையேற்கக் கூடாது என ஜே. ஆர். ஜயவர்த்தன கூறும்போது, இந் நாட்டு தொழிலாளர் வர்க்கமும், முற்போக்கு எண்ணம் கொண்டவர்களும் அவரை பிற்போக்குவாதி என பெயர் வைத்து அழைக்கின்றனர்.

அதேவேளை, முக்கூட்டணி அரசாங்கத்திலுள்ள லங்கா சமசமாஜக் கட்சியின் ட்ரொஸ்கியவாத தத்துவமேதையெனக் கூறப்படும் காராளசிங்கம் லேக் ஹவுஸ் பத்திரிகைகளை அரசாங்கம் கையேற்கக் கூடாது என்று கூறுகிறார். இவருக்கு என்ன பெயர் வைத்து அழைக்கலாம்?

## கீனகலை தோட்டத்திலிருந்து பொலிஸை உடனே வாபஸ் வாங்கு!

### இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் ஐ. ஜி. பி.யிடம் கோரியுள்ளார்

இலங்கை தொழிற் சங்க சம்மேளணத்தின் தலைவர் தோழர் வொட்சன் பெர்னாந்து, கீனகலை தோட்டத்தில் வேலைநிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்கள் மீது பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்து இரு தொழிலாளர்களின் உயிர்களைப் பறித்ததையும், இறந்தவர்களின் சடலங்களை உறவினர்களிடம் கொடுக்க மறுத்ததையும், கீனகலை தோட்டத்தை சுற்றிவளைத்துக் கொண்டு தொழிலாளர்களை உள்ளேயும், வெளியேயும் போகவிடாமல் தடைசெய்து கொண்டிருப்பதையும் பொலிஸ் படையின் உயர் அதிகாரியிடம் (ஐ. ஜி. பி.) சுட்டிக் காட்டி வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். கீனகலை தொழிலாளர்கள் தோட்டத்துக்குள் போய்வர எந்தவித தடையும் செய்யாது பொலிஸை உடனே வாபஸ் பெற வேண்டும் எனக் கோரியுள்ளார்.

## ஊழியர் சபைகளை பகிஷ்கரியுங்கள்

### இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம் இ.போ.ச. தொழிலாளருக்கு அறைகூவல்

இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் தோழர் சமல் டி. சில்வா ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார். அது பின்வருமாறு:

இ. போ. ச.வில் ''ஊழியர் சபை''கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே ''ஊழியர் கமிட்டி''களைப் பற்றி இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கம் தனது அபிப்பிராயத்தை துண்டுப் பிரசுரங்கள் மூலம் இ. போ. ச. தொழிலாளர் மத்தியில் தெளிவுபடுத்தியுள்ளது. அத்துண்டுப் பிரசுரங்களைப் படித்தவர்கள் இப்போது அமைக்கப்படவிருக்கும் ''ஊழியர் சபை''களின் தன்மையைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியும்.

''ஊழியர் சபை'' பற்றிய சட்ட திட்டங்களையும், போக்குவரத்து அமைச்சரின் செய்தியையும் கவனத்துடன் பரிசீலனை செய்தபோது, ஏற்கனவே எமது சங்கம் கூறிய அபிப்பிராயங்கள் பிழையற்றவை என்பது நிருபணமாகிறது. ''ஊழலையும், கவனக் குறைவையும் போக்கி ஒழுங்கை'' ஏற்படுத்துவதற்கு இ. போ. ச. தொழிலாளர்களை மேலதிகமாக வேலை வாங்குவதையே ''ஊழியர் சபை'' நோக்கமாகக் கொண்டுள்ளது. போக்குவரத்து அமைச்சர் தனது அமைச்சின் கீழுள்ள இ. போ. ச. வை இதன் மூலம் ஒழுங்கு படுத்தலாம் எனக் கருதுகிறார். ஆனால், எந்தவொரு ஸ்தாபனமும், நிர்வாகமும் திருப்திகரமாக நடைபெறவேண்டுமானால் அதில் வேலை செய்யும் ஊழியர்களை முதலில் திருப்திபடுத்த வேண்டும் என்பதை மட்டும் போக்குவரத்து அமைச்சர் மறந்துவிட்டார்.

''இந்த சபைகள் பூரண அதிகாரமுடையவைகளாக பரிணமித்து, தானே நிர்வாகத்தை நடத்தும் பொறுப்புள்ள ஸ்தாபனங்களாக உருவாக்கப்படும் நோக்கத்தை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்'' என போக்குவரத்து அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

ஏகாதிபத்திய சார்பு, நிலப்பிரபுத்துவ, பெரும் முதலாளித்துவ பொருளாதார அமைப்பு இருக்கும் போது, அவற்றின் சுரண்டலைப் பாதுகாக்கும் அடக்குமுறை அரசு இயந்திரத்தின் பிரதான அங்கங்களான முப்படைகள், பொலிஸ், நீதிமன்றம், சிறைச்சாலைகள், அதிகார வர்க்கம் இருக்கும் போது, தொழிலாளர் வர்க்கம் தாம் வேலை செய்யும், ஸ்தாபனங்களில் சுய நிர்வாகத்தை நடத்துவது என்பது இயலாத ஒன்று.

இந்த நிலையில் அமைக்கப்படவிருக்கும் ''ஊழியர் சபை''களால் தொழிலாளர் வர்க்கத்துக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை. ஆனால், வர்க்கங்களற்ற சகல உடைமைகளும், சமுதாயத்துக்கு சொந்தமான சோஷலிஸ சமூக அமைப்பில் தான் தொழிலாளர் வர்க்கத்தின் சுதந்திரமான நிர்வாக அமைப்பு மலரும் என்பதை இ. போ. ச. தொழிலாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, எமது சங்கத்தின் உறுப்பினர்கள் ''ஊழியர் சபை''களில் அங்கத்துவம் பெற வேண்டாம். அச் சபைகளுக்கான தேர்தல்களில் கலந்துகொள்ள வேண்டாம், பகிஷ்கரியுங்கள் என கேட்டுக் கொள்கிறேன்.

## இரத்தக் கடன் இரத்தத்தினால் தீர்க்கப்படும்

◎ 1-ம் பக்கத் தொடர்

பட்ட எதிர்ப்பு அவனை தோட்டத்துக்குள் வரவிடவில்லை. சில தொழிற் சங்கங்களைக் கையில் போட்டுக் கொண்டு தொழிலாளர்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தி வேலை நிறுத்தத்தை முறியடிக்க முனைந்தார்கள், தொழிலாளர்களுக்கு சட்டப்படி கொடுக்க வேண்டிய பங்கீட்டரிசியை கொடுக்காமலும், தாமதித்துக் கொடுத்தும் பட்டினி போட்டு பணிய வைக்கலாம் என எண்ணினார்கள். காடையர்களைத் தூண்டிவிட்டு வகுப்புவாதத்தைக் கிளறிவிட தூபம் போட்டார்கள். இவை அனைத்திலும் வெள்ளைத் தோட்ட நிர்வாகிகள்தான் தோல்வியடைந்தனர். ஆனால் கீனகலை தொழிலாளர்கள் செங்கொடி சங்கத்தின் தலைமையில் மேலும் இறுக்கமாக இணைந்து உறுதியுடன் போராட்டத்தைத் தொடர்கிறார்கள்.

இந்த நிலையில் பொலிஸின் துணையுடன் வேலை நிறுத்தத்தை முறியடிக்க வெள்ளைத் தோட்ட நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுத்தனர். செப்டம்பர் முதலாம் திகதி வெள்ளையன் சமர்வில் பொலிஸ் படையின் துணையுடன் தோட்டத்திற்கு வந்தான். ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, பெரும் முதலாளித்துவத்தின் காவல் நாயான பொலிஸ்படை வெள்ளை ஏகாதிபத்திய கொள்ளையர்களின் நலனுக்காக இரு மாதங்களுக்கும் மேலாக பசி பட்டினியுடன், பலவித நெருக்கடிக்குள் அந்நிய வெள்ளை தோட்ட நிர்வாகிகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது சுட்டது. இரு தொழிலாளர்களைப் படுகொலை செய்து அடக்குமுறை அட்டூழியம் நடத்துகிறது.

டட்லி சேனநாயகாவுக்குப் பதில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமரான போதிலும், மாஜி இடதுசாரிகளான என். எம். பெரேரா, கொல்வின், கெனமன் போன்றோர் அமைச்சர்களான போதிலும், தொண்டமானுக்குப் பதில் அசீஸ் நியமன எம்.பி. யான போதிலும் ஆயுதப்படைகளை பிரதான அங்கமாகக் கொண்ட அடக்குமுறை அரசு இயந்திரத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை; ஏற்படப்போவதில்லை என்பதை கீனகலை சம்பவங்கள் இந்நாட்டு தொழிலாளர் வர்க்கத்துக்கு அறிவுறுத்துகின்றன.

முக்கூட்டணி அரசாங்கம் இந்த வேலை நிறுத்தத்தை தீர்ப்பதற்கு உசிதமான நடவடிக்கைகளை எடுத்து வெள்ளை தோட்ட நிர்வாகத்தினரை நிர்பந்திக்காமல், அந்நிய ஏகாதிபத்திய கொள்ளையர்களான வெள்ளைத் தோட்ட நிர்வாகிகளைப் பாதுகாக்க தனது அதிகாரத்தின் கீழிருக்கும் பொலிஸ் படையை ஏவி தொழிலாளர்களை கொல்ல அனுமதித்துள்ளது. இத்தகைய அடக்குமுறை நடவடிக்கைகளை இந்நாட்டு தொழிலாளர் வர்க்கம் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருக்காது.

கீனகலை தோட்டத்தில் தமது இன்னுயிரைத் தியாகம் செய்த இரு தொழிலாளர் வர்க்கத் தியாகிகளான தோழர் பி. ராமையாவுக்கும், தோழர் அழகர்சாமிக்கும் நாம் புரட்சிகர வணக்கத்தைச் செலுத்துகிறோம். அதேவேளையில் அதிகரித்து வரும் இரத்தக் கடனை இரத்தத்தின் மூலம் தீர்க்க தொழிலாளர் வர்க்கமும் அதனது நேச சக்திகளும் கிளர்ந்தெழுவர் என்பதை ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ பெரும் முதலாளித்துவ அடக்குமுறை அரசு இயந்திரத்தின் மேல் மமதையுடன் வீற்றிருப்பவர்களுக்குக் கூறி வைக்கின்றோம்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2